வரகவி

# செய்கு அலாவுத்தீன்

நூல் அறிமுகமும்

# பிராந்திய முஸ்லிம் கலாசார விழாவும்

நினைவு மலர்

கரைத்திவு

1992

முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் அமைச்சின்

அனுசரணையுடன்

வரகவி செய்கு அலாவுத்தீன்

# நூல் அறிமுகமும் பிராந்திய முஸ்லிம் கலாசார விழாவும்

நினைவு மலர்

கரைத்தீவு.

1992

## இம்மலர்

இப்பிரதேசத்தின் பின்வரும் கலைஞர்களுக்கு

# *சமர்ப்பணம்*


கரைத்தீவு. மதார் சாஹிபு - தப்லா மாஸ்டர், பாடகர்
ஏத்தாலை, மர்ஹூம் முஹம்மது சாலி - தப்லா மாஸ்டர், பாடகர்
கல்பிட்டி. துவான் அமீன் - சார்ப்பினா மாஸ்டர்

*மலர்* : M. S. M. அனஸ்

*உதவி* : Z. A. ஸன்ஹீர்
K. M. A. அஸீஸ்
M. S. S. பரீனா
H. M. M. அஸ்ஹர்
A. A. பாரிஸ்

---

*அச்சுப்பதிவு: குமரன் அச்சகம், 201, டாம் வீதி, கொழும்பு-12.*



මෙම වර්ෂයේදී ආරම්භක ප්‍රාදේශීය මුස්ලිම් සංස්කෘතික උත්සවය 1992 නොවැම්බර් 21 දින පුත්තලම දිස්ත්‍රික්කයේ කරතිවුහිදී පැවැත්වීම ගැන සතුටුවෙමි.

කරතිවු ශ්‍රී ලංකාවේ කවුරුත් දන්නා ස්ථානයක් වන අතර, 19 වැනි ශත වර්ෂයේ කවියකු වූ සේහු අලවුඩින්ගේ උපන් ස්ථානය වූ මෙහි මෙය පැවැත්වීමට ලැබීම ඉතාමත් කාලෝචිතය. දෙමළ කාව්‍යයට ඔහු ගෙනා නවීකරණයට අමතරව ජීවිතයේ අභියෝගයන්ට උපේක්ෂාවෙන් මුහුණ දුන් ස්ථිර ධෛර්ය සම්පන්න පුද්ගලයකු වශයෙන් ඔහු කැපී පෙනේ. සේහු අලවඩීන් අන්ධයෙකුවූ බැවින් ඔහුට අධ්‍යාපනයේ විශාල වරප්‍රසාද ලැබීමට වරම් නොතිබුණි. දුෂ්කරතා මැද ඔහුගේම ප්‍රයත්නයෙන් දෙමළ සම්භාව්‍ය සාහිත්‍ය ඉගෙනීමෙන් ඉදිරියට ආ ඔහු පසුව තමන්ටම ආවේනිකවූ සාහිත්‍ය ආරක් දියුණු කළේය. ඔහුගේ දෙබස්වලට සාමාන්‍ය කථවහරේ වචන යොදා ගැනීම දෙමළ කාව්‍යය පිළිබඳ ඔහුගේ පර්යේෂණ සනාථ කරයි.

ඔහුගේ මුළු ජීවිත කාලය තුළදීම ඔහු ලියූ කෘතීන් පොතක ආකාරයෙන් පළවූයේ එකම අවස්ථාවකදී පමණක් වූ අතර, එයද පිටු හයක පමණ වූ කුඩා පොත් පිංචක් විය. විශ්ව විද්‍යාල කථිකාචාර්යවරයකු වන එම්. එස්. එම්. අනාස් මහතා විසින් සේහු අලවඩීන්ගේ කාව්‍යයන් පොතක් වශයෙන් ඉදිරිපත් කරනු ලබන ප්‍රථම අවස්ථාව මෙයයි.

දෙමළ කාව්‍යය සාහිත්‍යයේ ඓතිහාසික පරිණාමය සොයා බැලීමේදී සාහිත්‍යය හදාරණ සිසුනට මෙම ප්‍රකාශණය ප්‍රයෝජනවත් වන්නේයැයි මගේ බලාපොරොත්තුවයි. අතීතය ගවේෂණය කොට එහි අත්දැකීමෙන් ඉගෙනීම අවශ්‍යය. මේ අයුරින් මෙම ස්වභාවයේ ප්‍රකාශන සහ උත්සව මගින් ප්‍රයෝජනවත් සේවයක් ඉටුවේ.

ආරම්භක ප්‍රාදේශීය මුස්ලිම් සංස්කෘතික උත්සවය සර්වප්‍රකාරයෙන් සාර්ථක වේවායයි මම ඉත සිතින් පතමි.

ඩබ්ලිව්. ජේ. එම්. ලොකුබණ්ඩාර
සංස්කෘතික කටයුතු හා ප්‍රවෘත්ති අමාත්‍ය.



இன்று கரைத்தீவில் நடைபெறும் 'வரகவி செய்கு அலாவுதீன் நூல் அறிமுகத்திற்கும் பிராந்திய முஸ்லிம் கலாசார விழாவுக்கும்' வாழ்த்துக் கூறுவதில் பெருமகிழ்ச்சி யடைகிறேன்.

இலங்கைத் திருநாட்டின் வரலாற்றுப் புகழ்மிக்க பொன்பரப்பியில் கரைத்தீவு அமைந்துள்ளது. 2000-ம் வருடங்களுக்கு முன்னர் அறபு மக்கள் தொடர்பு கொண்டிருந்த முக்கிய பகுதியென பொன்பரப்பியைப்பற்றி வரலாறுகள் கூறுகின்றன.

கரைத்தீவு பெற்றெடுத்த பெருங்கவிஞர் மர்ஹூம், நா. செய்கு அலாவுதீன் நூல் அறிமுகம் வரலாற்றுப் புகழ்மிக்க அவர் பிறந்த பொன்னான பூமியில் இடம்பெறுவது சாலப்பொருத்தமான தாகும். அந்தகக்கவி செய்கு அலாவுதீனின் ஒப்பற்ற இலக்கியப் படைப்புக்களினால் கரைத்தீவின் பெருமை மேலும் உயர்ந்துள்ளது என்றால் அதுமிகையன்று.

இன்று அறிமுகமாகும் ஜனாப் எம். எஸ். எம். அனஸ் அவர்கள் எழுதியுள்ள வரகவி செய்கு அலாவுதீன் நூல் புலவரின் புகழை இலக்கிய உலகில் என்றும் மங்கா தொளிரச் செய்யும் சிறந்த படைப்பென்பதில் எனக்கு எவ்வித ஐயமுமில்லை.


இவ்வாறு மறைந்து கிடக்கும் இலக்கியச் செல்வங்கள் மக்கள் மத்தியில் கொண்டு வரப்படவேண்டும், அதேபோல் மறைந்துபோய்க் கொண்டிருக்கும் முஸ்லிம்களுக்கே உரிய கலாசாரங்களைப் பாதுகாப்பதையும் சமூகம் தனது கடமையாகக் கருதவேண்டும்.

இன்று நடைபெறும் பிராந்திய முஸ்லிம் கலாசார விழா இந்த நோக்கத்தைக் கொண்டதாகும். புத்தளம் பிரதேசத்துக்குச் சொந்தமான சில கலாசார நிகழ்ச்சிகள் இன்று நடைபெற உள்ளன. இவ்வாறான நிகழ்ச்சிகளை பிராந்திய மட்டத்தில் நடாத்தும் எமது திட்டத்தின் முதல் முயற்சி இதுவாகும்.

இந்த விழா சிறப்புடன் நிகழ்வதற்கு கரைத்தீவு மக்களும், பிரதேச சபை, தலைவர், உப தலைவர், உறுப்பினர்களும் வழங்கிய ஒத்துழைப்பிற்கும், சிறப்பாக ஏற்பாட்டுக் குழுவிற்கும் நன்றி கூறுகிறேன். எல்லாவிதத்திலும் இவ்விழா வெற்றி பெறவேண்டுமென வாழ்த்துகிறேன்.

எமது பணிகள் மேலும் சமூகத்திற்குப்
பயன்தர, வல்ல அல்லாஹ் அருள்புரிவானாக — ஆமீன்

**அல்ஹாஜ் எ. எச். எம். அஸ்வர், (எம். பி.)**
முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் ராஜாங்க அமைச்சர்.



மாண்புமிகு அமைச்சர் அஸ்வர் அவர்களுடைய பொறுப்பில் செயல்படும் இஸ்லாமிய பண்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு, இஸ்லாமிய சமய கலாசார மேம்பாட்டுக்கும், இஸ்லாமிய இலக்கிய கர்த்தாக்களையும் கவிஞர்களையும் ஊக்குவிப்பதற்கு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் பாராட்டத்தக்கவை ஆகும்.

அமைச்சின் பணிகள், கலைகளுக்கும் இலக்கியவாதிகளுக்கும் ஒரு உந்துசக்தியாக அமைந்து வருகின்றன. புதிய மறுமலர்ச்சிக்கும், புதிய சிந்தனைகளுக்கும் அவை வழிவகுக்கின்றன. சரித்திரப் புகழ்மிக்க 'அசன்பேயின் சரித்திரம்' என்ற தமிழ் நூலை மீள்பிரசுரம் செய்து அதனை அனைவரும் அறிந்துகொள்ள வழிசெய்தமை அமைச்சின் உன்னத பணிகளுள் ஒன்றாகும். இங்ஙனம் மறைந்து கிடக்கின்ற இலக்கியக் கருவூலங்களை தேடித் தருகின்ற நற்பணியில் ஒன்றாக 19 ம் நூற்றாண்டில் கரைத்தீவில் வாழ்ந்த அந்தகக்கவி ஷேகு அலாவுதீனின் கவிதை நூலையும் பிரசுரம் செய்து வெளியிடுவதன் மூலம் இன்னுமொரு சாதனையை இஸ்லாமிய பண்பாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு ஆற்றியுள்ளது.


புத்தளம் மாவட்டத்திலே ஒதுக்குப்புறமாக அமைந்துள்ள கிராமமான கரைத்தீவு ஷேகு அலாவுதீனின் பெயரால் புதுப்பொலிவு பெறுகின்றது. வரகவி ஷேகு அலாவுதீனின் ஞாபகார்த்தமாக பாடசாலைக் கட்டிடங்கள், வாசிகசாலை, புதிய வீதி என்பன பெயர் சூட்டப்பட்டுள்ளன. இப்பிராந்தியத்தின் பண்டைய இஸ்லாமிய கலாசார பாரம்பரியங்களைப் பிரதிபலிக்கும் நிகழ்ச்சிகள் மேடையேறுகின்றன.

கரைத்தீவில் எழுகின்ற இஸ்லாமிய கலாசார விழா, புதிய தலைமுறையினருக்கு ஷேகு அலாவுதீனின் பெருமையைப் பறைசாற்றும் விழாவாகவும், பழைமையைப்பேணி புதுமைபடைக்க புத்தூக்கம் அளிக்கும் விழாவாகவும் அமையும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

இஸ்லாமிய கலாசார விழாவின் மூலம் பழம்பெரும் கவிமணி ஷேகு அலாவுதீனை நினைவுபடுத்துவதோடு புதிய சரித்திரமொன்றையும் படைக்கின்ற இஸ்லாமிய பண்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் கலாசார விழா வெற்றி பெறவும் பணிகள் சிறக்கவும் மனமார வாழ்த்துகின்றேன்.

**பி. பி. தேவராஜ், எம். பி.**
இந்துசமய, கலாசார இராஜாங்க அமைச்சர்

கொழும்பு தமிழ்ச் சங்கம்



පුත්තලම කරතිවු ගම්මානයේ පැවැත්වෙන මුස්ලිම් සංස්කෘතික උත්වසය හා සේගු අලාවුදීන් කිවිඳු පිළිබඳ රචිත කෘතිය දෙරට වැඩීමේ අවස්ථාව වෙනුවෙන් මෙවැනි පණිවිඩයක් නිකුත් කිරීමට ලැබීම ගැන මම හෘදයාංගමව සතුටු වෙමි. ඉස්ලාම් ධර්මය හා මුස්ලිම් සමාජ සංස්කෘතික අංශයන් විෂය කොට ගෙන ප්‍රතිභා පූර්ණ කාව්‍ය ග්‍රන්ථ රචනා කරන ලද, 19 වන සියවසේ විසූ, සේගු අලාවුදීන් නම් ශ්‍රේෂ්ඨ අන්ධ කවියා සැමරීම පිණිස මෙම ග්‍රන්ථය රචනා කර ඇත. පේරාදෙණිය ශ්‍රී ලංකා විශ්ව විද්‍යාලයේ කථිකාචාර්ය එම්. එස්. එම්. අනස් මහතා විසින් රචිත පිටු 200 කින් පමණ යුතු මෙම කෘතිය මගින් කවියාගේ නිර්මාණ කීපයක් ගවේෂණාත්මකව විවරණය කර ඇත.

පුත්තලම් ප්‍රදේශයේ කෙළි සෙල්ලම් ආශ්‍රයෙන් ඉදිරිපත් කරන නිර්මාන කීපයක්ද මෙදින උත්සවයෙන් එළි දක් වේ. මුස්ලිම් ආගමික හා සංස්කෘතික ගරු අමාත්‍ය අල්හාජ් ඒ. එච්. එම්. අස්වර් මැතිතුමාගේ ප්‍රධානත්වය හා මාර්ගෝපදේශකත්වය මෙම සියළු කාර්යයන් සාර්ථක කර ගැනීමට බෙහෙවින් ඉවහල් වී ඇත.

මෙවැනි උත්සව ප්‍රදේශයේ සියළුම ජනකොටස්වල එකමුතු භාවය හා ජාතික සමගිය රැක දීමට මහෝපකාරී වන අතර උත්සව කටයුතු සාර්ථක වේවායි මම ශුභාසිංසනය කරමි.

**ගාමිණී ජයවික්‍රම පෙරේරා**
වයඹ පළාත් ප්‍රධාන ඇමති.

## වනාතවිල්ලු ප්‍රාදේශීය සභාවේ සභාපතිතුමාගෙන් පණිවුඩයක්. . , :


මුස්ලිම් ආගමික හා සංස්කෘතික ගරු අමාත්‍ය අල්හාජ් ඒ. එච්. එම්. අස්වර් මැතිතුමාගේ ප්‍රධානත්වයෙන් පැවැත්වෙන මෙම මුස්ලිම් සංස්කෘතික උත්සවයද මෙදින එළිදකින සේගු. අලවුදීන් නම් කවියාගේ කෘතීන් පිළිබඳ සමරු ග්‍රන්ථයද වෙනුවෙන් පණිවිඩයක් නිකුත් කිරීමට අවස්ථාව ලැබීම ගැන මම ඉතා සතුටු වෙමි. මෙවැනි උත්සව මුස්ලිම් ජනතාවගේ සංස්කෘතික හා ආගමික දියුණුවටත් මෙම ප්‍රදේශයේ ජනවාර්ගික සමගිය හා එකමුතු භාවයටත් හේතු වේයයි මම විශ්වාස කරමි.

කරතිවු වැනි නොදියුණු කුඩා ගම්මානයක් ආශ්‍රය කරගෙන මෙවැනි උත්සවයක් සංවිධානය කිරීම පිළිබඳවත්, මුස්ලිම් ජනතාවගේ ආගමික හා සංස්කෘතික දියුණුවත් පොදුවේ මෙම ප්‍රදේශයේ ජනතාවගේ සාමූහික එකමුතු භාවය හා දියුණුව පිළිබඳත් දක්වන උනන්දුව කෙරෙහි අල්හාජ් ඒ. එච්. එම්. අස්වර් මැතිතුමාට මගේ කෘතඥතාවය පිරිනමන අතරම මෙම උත්සවය සර්වප්‍රකාරයෙන්ම සාර්ථක වේවා යයි මම ප්‍රාර්ථනා කරමි.

කේ. බුද්ධදාස
වනාතවිල්ලු ප්‍රාදේශීය සභාවේ සභාපති

## விழா ஏற்பாட்டுக்குழுத் தலைவரின்

# வாழ்த்துச் செய்தி



கரைத்தீவு வரலாற்றில் இன்று ஒரு பொன்னான தினமாகும். நீண்ட காலமாக நாம் எதிர்பார்த்திருந்த எமது பேரபிமானத்துக்குரிய செய்கு அலாவுதீன் புலவரின் நூல் இன்று அறிமுகப்படுத்தப்படுகிறது.

நூல் அறிமுகம் ஒரு பிராந்திய முஸ்லிம் கலாசார விழாவாக பெரிய அளவில் நடைபெற வேண்டும் என்று கௌரவ அமைச்சர் அல்ஹாஜ் ஏ. எச். எம். அஸ்வர் எம். பி. அவர்கள் கருதினார்கள். கரைத்தீவில் இந்த விழா நடைபெறவேண்டும் என்பதும் அவர்களின் விருப்பமாகும். இன்று கரைத்தீவு மஸ்ஜித் முற்றவெளியில் பொதுமக்கள், அறிஞர்கள், மாணவர்கள் சூழ நடைபெறும் இவ்விழா நல்லமுறையில் நடைபெற வல்ல அல்லாவைப் பிராத்திக்கிறேன்.

புலவர் பிறந்த மண்ணில் அவரது படைப்புக்கள் இன்று அறிமுகமாகின்றன. இது கரைத்தீவுக்கு மாத்திரமல்ல முழு புத்தளப் பிரதேசத்துக்கும் பெருமை தரும் ஒரு நிகழ்ச்சியாகும். கௌரவ அமைச்சர் அவர்கள் எமது பின் தங்கிய கிராமங்களின் முன்னேற்றத்தில் காட்டும் அக்கறையாக இந்த விழாவை நாம் கருதினால் அது தவறல்ல. இந்த விழாவோடு பல அபிவிருத்தித் திட்டங்களையும் அவர்கள் ஆரம்பித்துவைத்துள்ளார்கள். அதற்காக கௌரவ அமைச்சர் அவர்களுக்கு மக்கள் சார்பாக நான் நன்றி கூறுகிறேன்.

விழா வெற்றிபெற அயராது பாடுபட்ட இராஜாங்கக் காரியதரிசி அல்ஹாஜ் எஸ். எச். எம். ஜெமீல் அவர்களுக்கும் அமைச்சின் இயக்குனர் ஜனாப் ஷெரீப் அவர்களுக்கும் அமைச்சைச் சேர்ந்த ஏனைய அதிகாரிகளுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பி. வி. ரி. நிஸார், ஜே.பி.**
பிரதேச சபை உபதலைவர்.

விழா ஏற்பாட்டுக் குழுவின் போஷகரும்

புத்தள நகர முன்னாள் நகர பிதாவுமான

அல்-ஹாஜ் எம். ஐ. பி. ஹாபி

அவர்கள் வழங்கிய

# வாழ்த்துச் செய்தி

புத்தளப் பிரதேசம் பல பெரியார்களையும் கல்விமான்களையும் புலவர்களையும் இந்த நாட்டிற்குத் தந்துள்ளது. அவர்களைப் பற்றி ஆராய்ச்சி செய்வதும் அவர்களின் சேவைகளை மக்களுக்கு எடுத்துக்காட்டுவதும் பயன்தரும் முயற்சியாகும். அந்த வகையில் செய்கு அலாவுதீன் புலவர் பற்றிய நூலும் இன்று நடைபெறும் இந்த விழாவும் நம் எல்லோரினதும் கவனத்தையும் கவரக்கூடியதென நான் நினைக்கின்றேன்.

இந்தவிழா வெற்றிகரமாக நடைபெறுவதற்கு கரைத்தீவு மக்கள் காட்டிய ஒத்துழைப்பு மிக உயர்வானது. கட்சி வேறுபாடுகளை மறந்து இந்த விழாவுக்காக ஒரு முகமாகப் பாடுபட அவர்கள் முன்வந்தது ஒரு சிறந்த முன்மாதிரியாகும்.

கரைத்தீவு மக்களின் கோரிக்கைகள் பல நிறைவேற இந்த நூல் அறிமுகவிழா ஒரு பெரும் வாய்ப்பாக இருந்ததை எண்ணி உண்மையில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

இவ்விழா சிறப்புடன் வெற்றிபெற
எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

# புத்தளம் இளம் முஸ்லிம் பட்டதாரிகள் சங்கம் பாராட்டு

செய்கு அலாவுதீன் புலவர் பற்றி ஒரு காத்திரமான ஆய்வு நூலை வெளியிட்டு வைத்ததோடு இன்று கரைத்தீவில் அதன் அறிமுக விழாவை பிராந்திய முஸ்லிம் கலை விழாவாகவும் உருவாக்கித் தந்துள்ள கெளரவ ராஜங்க அமைச்சர் ஏ. எச். எம். அஸ்வர் அவர்களின் முயற்சியை நாம் மனமாரப் பாராட்டுகிறோம்.

1984–ல் இருந்து வரகவி செய்கு அலாவுதீன் பாடிய பாடல்களைக் கிராமங்கள் தோறும் தேடிச் சேர்ப்பதிலும் அது ஒரு நூலாக கொண்டுவரப்படுவது அவசியம் என்பதை எடுத்துக் கூறுவதிலும் நாம் தீவிரமாக ஈடுபட்டிருந்தோம்.

அந்தக் கனவு முஸ்லிம் பண்பாட்டலுவல்கள் அமைச்சு மூலம் சிறப்பாக நிறைவேற்றப்பட்டுள்ளமை கண்டு பூரிப்படைகிறோம்.

வறுமையில் வாடிய அந்தகக் கவியின் மறைந்து கிடந்த புலமை இன்று எட்டுத்திக்கும் பரவி இலக்கிய மணம் பரப்புகிறது. தமது சிறந்த ஒத்துழைப்பின் மூலம் கரைத்தீவு மக்கள் போற்றத்தக்க பணியை இன்று நிறைவேற்றியுள்ளனர்.

முஸ்லிம்களின் கலை, இலக்கியங்களுக்கு புத்துயிரளிக்க முன்வந்துள்ள முஸ்லிம், சமய பண்பாட்டலுவல்கள் அமைச்சின் பணி தொடர வாழ்த்துகிறோம்.

**எஸ். ஆர். எம். ஸலீம்**
**எம். பி. இப்திகார் முஹம்மத்**
**ஏ. ஜீ. எம். காமில்**

# எழில் பொங்கும் கரைத்தீவு

கரைத்தீவு – H. M. முஹம்மது அஸ்ஹர்

நீலக் கடலின் ஓரத்திலே
நீங்கா புகழின் செழிப்பினிலே
தென்னஞ் சோலை நடுவினிலே
நிமிர்ந்து நிற்பது கரைத்தீவே

மஞ்சள் நிறத்துப் பொன் நிலவும்
வெள்ளொளி கொண்ட சூரியனும்
மாறி மாறிச் சுழல்வதுவும்
உந்தன் எழிலை ரசிப்பதற்கோ

வெள்ளைச் சட்டை அணிந்திருக்கும்
பாடசாலை மாணவர் போல்
உப்பு நிறைந்து கிடப்பதுவும்
உந்தன் அழகு மேம்படவோ

பூ உலகப் பூந்தோப்பில்
நல் மேதைகளை ஈன்றெடுத்து
நற் பாதைகள் காட்டித்தந்து
வளம் கொழிக்கச் செய்வித்தாய்

இப்புவி பூத்திட்ட புஷ்பங்கள்
அதில் என்றுமே தீராத வாசங்கள்
இலக்கணப் புலவர் பொன்னிமுத்து
கரைத்தீவு தந்திட்ட பொதுச் சொத்து

சிப்பிக்குள் உள்ளிருந்து
துலங்குகின்ற முத்துப் போல
அந்தகப் புலவர் செய்கு அலாவுதீனை
ஈன்றெடுத்த கரைத்தீவே

பல ஆயிரம் ஆண்டுகள் ஓடிமறைந்தாலும்
உன் புகழ் முத்திரை பதித்திடவோ
வரகவி புகழ் அந்தகரை
இப்புவி மீதினிலே உவந்தளித்தாய்.

# கரைத்தீவின் கல்வி வளர்ச்சி

— T. K. A. அஸீஸ் —
(ஓய்வுபெற்ற அதிபர்)

"ம்மாடி: வாத்திவேலை கிடைத்தால் 'ஊருக்கு ஊர் மாத்துவான்கள்: வேலையை விட்டு விடு: 1918 ஆம் ஆண்டு சட்டாம்பிள்ளை உபாத்தியாயர்களாக நியமனம் பெற்ற கா. கலிபா லெப்பை மரிக்காருக்கும் நெ. முகம்மது காசீமுக்கும் வந்த, அக்கால சமுதாய அமைப்பின் மரபுவழி வந்த மொழிகள், இளசுகள் இரண்டும் துள்ளித் துவண்டன: கரை தாண்ட முடியாத காலகட்டம். ஆம், அவை அரும்பிலேயே கருகிவிட்டன. இந்த அறியாமை ஆணை அன்று மாத்திரம் அரங்கேறி இருக்காவிட்டால், இன்று எத்தனையோ உத்தியோகத்தர்களை இவ்வூர் கண்குளிரக்கண்டு களித்திருக்கும்.

பாடசாலைகள் அமைப்பதற்கு கல்வியிற் புலமையும் ஆர்வமும் ஆளும் தகுந்த மண்ணைத்தேடி, ஆங்கில ஆட்சி அலைந்த வேளை. வரகவி சேகு அலாவுதீன் புலவர் அவர்கள்; இலக்கியப் புலமை நிறைந்த பொன்னிமுத்து அப்பார் அவர்கள்; இவர்களது இலக்கிய வெளிப்பாட்டை எழுத்துருவில் ஏந்தி நின்ற எழுத்தாளர்கள் பலர் ஆங்காங்கே இலங்கி நின்றனர். அன்று 1913 ஆம் வருடம் ஆனித் திங்கள் 2 ம் நாள், தற்போது கிராம முன்னேற்றச் சங்கக் கட்டிடம் அமைந்திருக்கும் தானத்தில் புத்தளப் பகுதியிலேயே, முதல் அரசாங்கப் பாடசாலையாக திரு. என். ஜோசப் அல்பிரட் அவர்களது தலைமையில் தாள் பதித்துத் தலை நிமிர்ந்தது. அந்த நல்ல நாளில் பதினான்கு மாணவர்கள் பள்ளியில் சேர்ந்தனர். சேர்ந்தவர்களில் கா. கலிபா லெப்பை மரிக்காரின் சேர்விலக்கம் ஒன்று.

தன்னந் தனியாக நின்ற தலைமை உபாத்தியாயர் திரு. என். ஜோஸப் அல்பிரட் அவர்கள், 1914 ம் வருடம் இரண்டு வகுப்புக்களைக் கொண்ட 34 பிள்ளைகளுக்கும், 1915 இல் மூன்று வகுப்புகளைக் கொண்ட 55 பிள்ளைகளுக்கும், 1916-ம் ஆண்டு நாலு வகுப்புக்களைக்கொண்ட 57 மாணவருக்கும், 1917-ல் 59பிள்ளைகளைக் கொண்ட ஐந்து வகுப்புக்களுக்கும் பாடஞ்சொல்லிக்கொடுத்து, ஒரு குறுகிய காலக் கட்டத்திலேயே இரு சட்டாம்பிள்ளை உபாத்தியாயர்களை உருவாக்கினார் என்றால், அச்சான்றோன் எஞ்ஞான்றும் இம்மண்ணில் வாழ்வானன்றோ!

எழுத வாசிக்கத் தெரிந்துகொண்டாற் போதும் எனக் கருதியோர் ஒரு புறமும், பள்ளிக்கூடம் போனாலென்ன, போகாவிட்டாலும் என்ன என எண்ணிய ஒரு கும்பல் மறுபுறமும், இவற்றிற்கும் மேலாக, இவர்களை எல்லாம் அடக்கி ஆண்ட வறுமை அரக்கன் இன்னோர் புறமும், அறிவின் அடித்தளத்தையே ஒடித்துவிட ஒருமித்து நின்றனர். இதனைக் கண்டு உள்ளம் உருகிநின்ற உபாத்தியாயர்களின் உபதேசங்களைஎல்லாம், 'ஐயா, கண்ணை மாத்திரம் வைத்துவிட்டு மத்தவற்றை எல்லாம் உரியுங்கள்' எனக்கூறி முதலாம் இரண்டாம் மூன்றாம் வகுப்புக்களோடே பிள்ளைகளைப் பள்ளியை விட்டும் நிறுத்தும் அளவுக்குத்தான் விளங்கிக் கொண்டனர். இது ஒன்றிரண்டல்ல, மூன்று நான்கு தசாப்தங்களுக்குத் தொடர்ந்தது.

ஆனமட்டும் அயர்ந்த அம்மக்களுக்கு இப்போது மட்டும் ஏனோ ஒரு கல்வித் தாகம் தலை காட்டியது. தாகந்தணியத் தலமின்றித் தவித்தனர். ஆறு ஏழுக்கு மேல் வகுப்புக்கள் இல்லை; ஆசிரியர் பற்றாக்குறையும் கூட என்ன செய்வ தென்று தலையைச் சொறிந்துகொண் டிருந்த அவ்வேளையை, விடிவதற்கு முன்னுள்ள குமரிஇருட்டென்று சொல்வது பொருந்தும்போல் தோன்றுகின்றது.

அது 1947-கள். மேற்குத்திசையில் ஒரு தீபச்சுடர் தென்பட்டது. ஒளி வந்ததிக்கை நோக்கி, நாலைந்து பேர் ஓட்டமும் நடையுமாகப் புறப்பட்டுச் சென்றனர். சென்ற இடத்தை நோக்கியபோது, அது கற்பிட்டி மாநகரம். காதர் மாஸ்டரின் தலைமையில், அ. கணபதிப்பிள்ளை, இராஜசிங்கம், சின்னத்துரை போன்ற பேராசான்களின் துணையோடு ஒரு சமுதாயமே உருவாக்கப்பட்டுக் கொண்டிருந்தது. அவர்கள் ஆக்கிய சிற்பங்கள் என்றும் அழியாச் சின்னங்கள். ஒளி நோக்கிச்சென்ற இந்நாலைந்து பேரும் அம்மகான்களால் அழகு தவழச் செப்பனிடப்பட்டார்கள். 'ஆசான்' என்ற கோலத்தோடு அவர்கள் ஊர் அடைந்தபோது, அது தன் விழிகளை அகலத்திறந்து பார்த்தது. தம் சாலையும் தம்மக்களும் தலை நிமிர வழி தேடியது.

அன்று 1961 தலைமை ஆசிரியர் ஜனாப் யூ. எம். எம். அஷ்ரப் அவர்கள்; முதன் முதலாக க. பொ. த. (சா/த) பரீட்சைக்கு நான்கு பரீட்சார்த்திகளை அனுப்பிய அந்த நல்ல நாள், என்றும் இருக்கவேண்டும். பின்னால் வந்த ஜனாப் ஏ. கே. ஜப்பார் அதிபர் காலத்தில் அதன் விசை மேலும் முடுக்கி விடப்பட்டது. அதன் ஓட்டம் பல படித்த வாலிபர்களைத் தேடித்தந்தது.

தொடர்ந்து வந்தகாலங்களைநினைக்கத்தான் நெஞ்சம் செந்நீர் சொரிகின்றது. பத்து வகுப்புக்கள்; ஆசிரியர்களோ மூவர், ஓடித்திரிந்த கல்வி வளர்ச்சி, தவழ்ந்து உறங்கியது. நீண்டு வளர்ந்த இந்நிலை ஒருசரிவை உருவாக்கியதோடு, உள்ளதையும் உருக்குலைத்து விட்டது என்பதைச் சொல்லும் பொழுதே விழிநீர் பனிக்கின்றது. வேற்றூர் சென்று கற்கலாமென்றாலோ குறுக்கிட்ட வறுமை கால் விலங்கிட்டது. அப்போது அறியாமை அணைத்த கல்வித் தீபத்தை இப்போது வறுமைவாட்டிவதைத்தது. வாட்டத்தைப் போக்க வழியின்றி மயங்கி நின்றவேளையில், பல்லாண்டுகளுக்கு அப்புறம் அது தானாக மறைந்ததற்கும், ஒரு பரம்பரை இருண்டதற்கும் சரியாகவிருந்தது.

இடைக்கிடை தலைவிரித்தாடிய அரசியல் தலையீடுகள், முன்னேற்றத்தின் அடுத்த தடைக்கல்லாயின. இந்த விவேகமற்ற செயல்களைக் கொஞ்சம் அழுத்தங் கொடுத்துச்சொல்லித்தான்ஆகவேண்டும். எனினும் காலத்துக்குக் காலம் தோன்றிய பாடசாலை நலன் விரும்பிகள் ஆற்றிய அருந்தொண்டுகளையும் நெஞ்சம் மறக்கவில்லை.

எனினும் இடைக்கிடை ஏற்பட்ட எழுச்சியின் பயனாய் ஓலைக் கொட்டகையாக ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை, 1930 அளவில் ஒரு நிரந்தரக் கட்டிடமாக இப்போதிருக்கும் தலத்தில் அமைந்ததோடு, இன்று அறுநூறு பிள்ளைகளையும் பல கட்டிடங்களையும் கொண்டு காட்சி தருகின்றது. நாலைந்து வகுப்புகள் படித்தவுடன் வீட்டினுள் முடங்கிய பெண்பிள்ளைகள், இன்று சர்வகலாசாலைக்குப் போகும் அளவுக்கும் துணிந்து விட்டதையும்எண்ணி மகிழவேண்டியுள்ளது. சிலர் ஆசிரியர்களாக நியமனம் பெற்றிருக்கும் வேளையில், இன்னுஞ் சிலர் விவசாய, சுங்க, தபால் இலாகாக்களிலும். மற்றுஞ் சிலர் கச்சேரி தலதாபனம் கூட்டுத்தாபனங்கள் போன்றவற்றிலும் உத்தியோகங்கள் வகிக்கின்ற காட்சி மகிழ்ச்சிக்குரியது.

இவ்வூரின் முதல் சட்டாம்பிள்ளை உபாத்தியாயராக திரு. சவரிச்செட்டி, கபரியல்பிள்ளை என்னும் பிச்சை மாஸ்டர் எப்படித்திகழ்கின்றாரோ, அவ்வாறே

இப்போதைய அதிபர் செல்வி எம். எஸ். எஸ். பரீனா அவர்கள் முதல் பட்டதாரி யாவர்.

துடிப்புடன் காணப்படும் இவரின் ஆசிரியர் குழு, ஆற்றலும் விவேகமும் நிறைந்தது. பாடசாலை நலன் விரும்பி களுக்கு நான் கூறவேண்டிய ஒன்று உள் ளது. அது; 'யார் குற்றியாவது அரிசியா னால் சரி' என்ற உயர்ந்த பரந்த மனப் பாங்கு, வேண்டும் என்பதே.

மகா வித்தியாலயமாகத் தரமுயர்த்த விண்ணப்பித்த வேளைகளிலெல்லாம், அதன் பெறுபேறு காயாகவே எதிரொ லித்தது. அது அப்போது நிறைவேற்றப் பட்டிருக்குமாயின், இதுகாலும் எத்துணையோ சலுகைகள் பெற்று, அதன் வளர்ச்சி வேகத்தை இன்னும் உசார் படுத்தி இருக்கலாம்.

விளையாட்டு மைதானம் அமைக்கக் கல்வி இலாகா இசைந்ததோடு, இடந் தெரிந்து, காணியும் அளந்து, எல்லை களும் காட்டப்பட்டபோது மனம் கனிந்து இருந்த வேளையில், ஏற்பட்ட ஒரு திருப் பம் 'இலவு காத்த கிளியின்' கதையாக்கி விட்டதை எல்லோரும் அறிவர்.

பாடசாலைக்கும் ஊருக்கும் அரைக் கல் தொலைவு இருக்கையில், குடிநீர் வாய்ப்புக் குன்றின், தாகமுறுஞ்சிறார் என் செய்வர்!

மின் வசதிகள் செய்து தருமாறும் வேண்டப்படாமலில்லை. மினி ஆய்வு கூடத்துக்கான பொருட்களை மிக நன்றி யறிதலுடன் பெற்றுக்கொள்ளப்பட்ட வேளையில் அவற்றைப் பிரயோகித்துக் கற்பிக்கத் தகுந்த இடவசதி இல்லையே என்ற விஞ்ஞான ஆசிரியரின் முணுமுணுப் பையும் அலட்சியம் செய்துவிட முடியாது. தொலைக்காட்சிப்பெட்டி, வானொலி, தட்டச்சு இயந்திரம் ஆகியன கல்வியோடு எத்துணைத் தொடர்பு கொண்டுள்ள தென்பதைக் கூறத்தேவை இல்லை. நிலவு கின்ற கட்டிடப் பற்றாக்குறையும் போதிய ஆசிரியரின்மையும், கல்விப் பாதிப்பின் பெரும் பங்கை வகிக்கின்றன.

இவற்றைக் கண்ணுறும், புத்தளத் தொகுதிக்கு நியமிக்கப்பட்ட பாராளு மன்ற உறுப்பினரும், முஸ்லிம் சமயக் கலாசார அமைச்சருமான கௌரவ ஏ. எச். எம். அஸ்வர் அவர்கள், நிறைவு செய்வார்கள் என நினைக்கும்போது உண் மையிலேயே நெஞ்சம் இனிக்கிறது.

இறுதியாக, 1984 களில் வரலாறு இவ்வருடம் படைத்த, அதன் பயனாய் ஏழு பிள்ளைகள் சர்வகலாசாலை செல்ல அடிக்கல்லிட்ட, என் அன்புக்குரிய ஆசி ரியப் பெருந்தகைகளைத் தனித்தனியாகக் குறிப்பிடாவிட்டால், கல்வி உலகைக் கடிந்தவனாவேன். இவ்வேளையில், ஓர் ஆசிரியன் கௌரவிக்கப்படாவிட்டால் இன்னோர் ஆசிரியன் தோன்ற மாட் டான்' என்ற அறிஞர் அஸீஸ் அவர் களின் கூற்றும் ஞாபகத்துக்கு வருகின்றது.

நீண்ட நெடும் ஆண்டுகளாகக் கல்விப் பணி புரிந்து இப்பாடசாலையின் வளர்ச் சிக்கு அச்சாணியாய் விளங்கிய ஜனாப் களான K.L.M.S. ஹமீத், A.L H. மரிக் கார் ஆகியோருக்கும் பாடசாலை வளர்ச்சி யிலும் கல்வி முன்னேற்றத்திலும் அயராது அரும்பாடுபட்ட திரு. V. அருணாகரன், திருமதிகளான V. விக்னேஸ்வரி, T. ஜெயந்தி, அன்சிலா கலாசியோன், ஜனாப்கள் M. P. M. நவ்பல், S. L. நூஹ் லெப்பை, M.H.M. கலீல், M.V.M. றஹீம், P.M.A. ஹத்தாத், M.I.M. சுகைப், M.H.M. ஹில்மி, திருவாளர்களான C. T. தேவ நாதன், அருளப்பு, S. A. குரூஸ், S. ஜவா ஹிர்சாலி, திரு. பி. கைலாயமூர்த்தி ஆகிய இவ்வாசிரிய மணிகளின் சேவைகளை கரைத்தீவு என்றுமே மறக்காது.

# அருட்கவிஞன் அலாவுத்தீன்

— எஸ். ஐ. எம். அப்துல் ஜப்பார் —

அண்டம் தனைப்படைத்த அருளாளன் அன்புடையோய்
தண்டனிட்டேன் நின்கருணைதா

கற்பிட்டி என்றொரு
பொற்பிட்டி தன்னதின்
அக்கரை அமைந்த ஊரு

நற்குணம் கொண்டவர்
நலமோடும் வாழும் பொன்
பரப்பதை சேர்ந்த ஊரு

உப்பளப் பூமியும்
முக்கனிச் சோலையும்
ஒன்றாய் அமைந்த ஊரு

பத்தாறு ஏக்கரில்
பரந்துள்ள நெஞ்சினர்
பரிவோடு வாழும் பாங்கான ஊரு

முத்தமிழ் வித்தகன்
செய்கு அலாவுத்தீன்
முழுமையைக் கண்ட ஊரு

கடலாடு அலை வந்து
கரை மீது விளையாடும்
கரைத்தீவு என்றதன் பேரு

மழலையை தாண்டிய
செய்கு அலாவுத்தீன்
பிள்ளையாய் மாறி நின்றான்

ஒளியற்ற கண்ணோடு
உலகத்தைக் காணாது
ஒன்று மறியாது நின்றான்

கண்கவர் வண்ணங்கள்
கதிரவன் ஒளியதும்
கண்டதே இல்லை அவன்

என்றாலும் செய்கு
அலாவுத்தீன் உள்ளத்தில்
எங்கேயோ சிறு சிலிர்ப்பு

கால் போன போக்கிலே
கடுகிச் சென்றானவன்
கவலையை நெஞ்சிலேந்தி

வல்லவன் அருள் வந்து
வாரியே அணைத்தது
வஞ்சகமில்லாத நெஞ்சை

சங்கு முழங்கிச்
சதங்கை ஒலித்தது
சற்குணன் அவன் நெஞ்சில்

கண்ணொளி அற்றவன்
கல்பொளி கொண்டனன்
ஹக்கன் அருள் வந்து

கத்தும் கடல் தரு
முத்துக் கவிகளை
நித்தம் நித்தம் படைத்தான்

சித்தர் பாடல்களை
வெட்டி வீழ்த்தத் தகு
சக்திக் கவிகள் தொடுத்தான்

செங்கை குலுங்கிட
தண்டை கலீர் என
தங்கத் தமிழ் வந்தாள்

பங்க மிலா மகன்
செய்கு அலாவுத்தீன்
மடிமேல் நடமிட்டாள்

வேறு

இறைவனின் தூதர் நாதர்
இறை நேசர் அவ்லியாக்கள்
கறைகளை போக்கி வென்ற
காத்திமுல் அன்பியாக்கள்
நிறை புகழ் பாடி நின்றான்
நெறிகளைக் காத்து நின்றான்
நிறை குடம் அலாவுத்தீன்
தீன் புகழ் பாடி நின்றான்
சாராயம் குடித்த ீபர்கள்
சதிராடல் கண்டு நொந்து
சாராயம் விற்கும் அந்த
தவறணை தவற வேண்டி
சரியாக அடியும் தொடுத்துச்
சாடினான் கவி எடுத்து
தவறணை அழிந்தது செய்கு
அலாவுத்தீன் கவி எழுந்தது
தரவளி மரமறுத்து
தரமொடு குடிலமைத்து
கழலடி தொழுவதற்கு
வழி நட மயிலே என்று
புகழடி தமிழ் எடுத்து
புகழ்க் கவி தனையமைத்து
கல்லடி நாதர் புகழ்
களிப்புடன் பாடி வைத்தான்
அறமதும் பாடி வைத்தான்
அழுகையும் பாட்டில் வைத்தான்
புறமது கூறுவோரை
புரட்டியும் எடுத்து வைத்தான்
திறமுறு தீரர் தன்னின்
சிறப்புக்கள் பாடி வைத்தான்
வர கவி எங்கள் செய்கு
அலாவுத்தீன் எனும் புலவன்

# வரகவி செய்கு அலாவுதீன் நூல்
## ஒரு நோக்கு

— கலாநிதி. துரைமனோகரன் —
தமிழ்த்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்

இலங்கையின் கலை இலக்கியத்துறைகளில் பயன்தரும் முயற்சிகள் நடைபெறத் தொடங்கியுள்ளன. புதிய தேடல்கள் கிராமமட்டத்தில் நிகழ ஆரம்பித்துள்ளன. இத்தகைய தேடல் முயற்சிகளுக்கு வாய்ப்பான பிரதேசங்களுள் ஒன்றாகப் புத்தளமும் விளங்குகின்றது. சைமன் காசிச்செட்டி, செய்கு அலாவுதீன், அப்துல் மஜீதுப் புலவர், செய்கு இஸ்மாயில் புலவர், அலி உதுமான் புலவர் போன்ற அறிஞரும், புலவர்களும் தோன்றிய பிரதேசம் அது.

இவர்களுள் வரகவி செய்கு அலாவுதீன் (1890–1938) கரைத்தீவிற் பிறந்தவர். முஸ்லிம்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வரும் கிராமங்களில் ஒன்றாகக் கரைத்தீவு விளங்குகின்றது. கல்வி, போக்குவரத்து முதலிய வசதிகள் எதுவுமின்றி, வறுமையால் வதங்கிய கிராமமாக அது விளங்கியது. அத்தகைய ஒரு குக்கிராமத்தில், முறையான கல்வியின்றி, இயல்பாகப் பாடும் திறன் கொண்ட ஒருவராகச் செய்கு அலாவுதீன் விளங்கினார். அந்தகராகவும் அவர் விளங்கியதால், நூல்களைத் தாமாகப் படிக்கவோ எழுதவோ அவரால் இயலவில்லை.

புலவர் செய்கு அலாவுதீன் இசைப் பாடல்கள் இயற்றுவதோடு மட்டுமன்றி, பாடகராகவும், நாடக ஆசிரியராகவும், நாடகத் தயாரிப்பாளராகவும், புராண படனம் செய்பவராகவும் விளங்கினார். இத்தகைய பல்துறை ஆற்றல் வாய்ந்த வரகவி செய்கு அலாவுதீன் பற்றியதும், அவரது பாடல்கள் பற்றியதுமான தேடல் முயற்சியின் விளைவாக உருவானதே எம். எஸ். எம். அனஸ் அவர்களின் **வரகவி செய்கு அலாவுதீனும் அவரது பாடல்களும்** என்ற நூல் ஆகும்.

செய்கு அலாவுதீனின் பாடல்களைக் கவனிக்கும்போது, ஓர் உண்மை புலனாகத் தவறாது. சமய அடிப்படையைக் கொண்டவையாக அவரது பாடல்கள் விளங்குகின்றபோதிலும், நூலின் தொகுப்பாசிரியரான ஜனாப் அனஸ் கூறுவதுபோல், 'சமயத் தளத்திலிருந்து சமூகத்தளம், நோக்கி இலக்கியத்தை மாற்றும் போக்கு செய்கு அலாவுதீன் படைப்புகளில் கூடிய தீவிரத்துடன் விளங்குவதை நன்கு அவதானிக்க முடிகிறது.'' அவர் அந்தகராக இருந்தபோதும் அவரது அறிவுப் பார்வை விரிந்ததாகவே இருந்தது. அலாவுதீனின் பெரும்பான்மையான பாடல்கள் இறைவனைப் பற்றிய துதியாகவும், நபிகள் நாயகத்தின் புகழ் பாடுவனவாகவும், அமைந்தபோதும் அவரது பாடல்களில் சமுகம் பற்றிய பாடல்களும் குறிப்பிடத்தக்கவையாக உள்ளன.

சமய அடிப்படையில் அமைந்த, தமிழ் இலக்கியத்தில் இடம்பெற்று வந்துள்ள பக்தி மார்க்கத்தின் பிரதிபலிப்பினை இக் கவிஞரின் பாடல்களிலும் காணலாம். இத்தகைய பாடல்கள் தன்னுணர்ச்சியின்

வெளியீடுகளாகவும், பிறருக்கு அறிவுரை கூறுவனவாகவும், அமைந்துள்ளன. ''பாடும் யாறகுலே பாவியானேனையா உம்பதம் நம்பி வந்தேன் உண்மையாகவே'' ''செய்கு அலாவுதீன் தொண்டன் செந்தமிழவாவினன் விண்டேன் வாகையணிப்புய வள்ளல் முகம்மது வரந்தர வருவீரே'' என்றவாறு அமைந்தவை, கவிஞரின் தன்னுணர்ச்சி வெளியீடுகளாகக் காணப்படுகின்றன.

அவரது ஞானப்பாடல்கள் இஸ்லாத்தின் வழிநின்று, உயர்ஞானநிலைக்குத் தம்மைத் தயார்ப்படுத்த விழைந்த ஒருவராகக் கவிஞரை இனங்காட்டுகின்றது. பௌதிக நிலை கடந்த உலகப் பொதுவான ஞானநோக்கு, அவரது அத்தகைய பாடல்களில் இடம்பெற்றுள்ளது. அதனால், அவரது ஞானப்பாடல்களிற் சமயப் பொதுமை இயல்பாகவே காணப்படுகின்றது.

செய்கு அலாவுதீனைச் சிறப்பாக இனங் காட்டத்தக்கவையாக, சமூகம் தொடர்பான அவரது பாடல்களும், வழிநடைச் சிந்துகளும் காணப்படுகின்றன. கவிஞரின் சமூகம் தொடர்பான பாடல்களில், பஞ்சம், கல்விநிலை, சுகாதாரம், கலியுகக் கொடுமை, பெண்களின் கற்புநிலை, மதுவிலக்கு ஆகியன பொருள்களாக அமைந்துள்ளன. வறுமையினைத் தமது சொந்த வாழ்வில் தாராளமாகவே அனுபவித்து வந்த கவிஞர், தமது காலத்தில் இலங்கையைப் பாதித்த பஞ்சத்தின் கொடுமையை வெவ்வேறு பாடல்களிற் சமூக அக்கறையோடு வெளிப்படுத்தியுள்ளார். ''கால மெலிவின் கோர வறுமையால் கலங்குது இலங்கையில் கொடுங் கலி'' என்றும், பஞ்சகாலம் ஐயா மக்கள் பரிதவித்து உழலச் செய்த வெஞ்சகோலமையா'' எனவும்,

''பஞ்சமே இந்த மாநில மீதில் பற்றுவதேன்
பரனே இறையவனே பெருநரகக்
கொதியது போல் – கொடும்
பஞ்சமே இந்த மாநில மீதில் பற்றுவதேன்''

என்றும் பஞ்சத்தின் கொடுமையைப் பலவாறாகக் குறிப்பிட்டுள்ளார். பஞ்சத்தின் நிலையைப் பாவலரின் **பின்வரும்** பகுதி உணர்த்துகின்றது.

''காசு கிடையாத பஞ்சமும் காணிகளெல்லாம்
கைத்தொழில் இல்லாத பஞ்சமும்
தொழிலில்லாமல் தொந்தரவுண்டான பஞ்சமும்
பேசமுடியாத வண்ணம்
பெரியோர் சிறியோர் எல்லாம்
தூசிபோல் பறக்க உந்தன்
துய்யவன் முனிவு உண்டாச்சு''

பொருளாதாரச் சீரழிவு, எந்த அளவுக்கு இலங்கையைப் பஞ்சத்தின் வாயிலில் அவர் காலத்தில் வைத்திருந்தது என்பதையும் புலவர் விண்டு காட்டுகின்றார். பின்வரும் பாடலடிகள் பொருளாதாரச் சீரழிவினைப் புலப்படுத்துகின்றன:

''தேயிலை விலையும் போச்சே - எங்கள்
தேங்காய் விலை குறையலாச்சே
தோய்கடன் வட்டி ஏறலாச்சே – எங்கள்
சொத்துக்கள் விலை குறையலாச்சே

இவற்றின் வாயிலாக, **கரைத்தீவில் இருந்துகொண்டே இலங்கைத்தீவு முழுவதையும் தேசிய ரீதியாகச் சிந்தித்த ஒரு புலவராகச் செய்கு அலாவுதீன் தம்மை இனங் காட்டிக் கொள்கிறார்.**

புத்தளத்தின் மோசமான அக்காலக் கல்வி நிலையை அவர் பாடியுள்ளார். அத்தோடு சுகாதார விதிகளையும், மதுவிலக்கையும், போதைவஸ்துகளுக்கு அடிமையாக வேண்டாம் என்ற அறிவுரைகளையும் அவர் பாடல்களிற் காணமுடிகிறது.

செய்கு அலாவுதீன் பாடியுள்ள வழிநடைச் சிந்துகள் தனியான சுவை வாய்ந்தவை. அந்தகராக அவர் இருந்தபோதிலும், தமது வழிநடைச் சிந்துகளிற் காட்சிப்பாங்கான சித்திரிப்புகளைச் சிறப்பாகப் பயன்படுத்தியுள்ளார்.

''முங்கிலாத்துப் பாலம் முன்னே
தெரியுது மானே—அதை
விட்டுக் கடந்து முச்சந்தி வீதியில்
மிச்சங் கடையுண்டு தேனே
அங்கிதன் முன் மணத்தீவு தோணுது
அப்புறம் போகையில் உப்பளம் தோணுது

என்பது போன்று, வழிநடைச் சிந்துகள் அனைத்தும் காட்சிப் பாங்காக அமைந்துள்ளன. அதே வேளை, புத்தளப் பிரதேசப் புவியியல் அமைப்புகள், சமய நிகழ்ச்சிகள், பண்பாட்டு அம்சங்கள் முதலானவற்றையும் புலவர் தமது வழிநடைச் சிந்துகளிற் தந்துள்ளார்.

செய்கு அலாவுதீனிடம் காணத்தகும் சிறந்தவோர் அம்சம், அவரது தன்னம்பிக்கை உணர்வாகும். தாம் அந்தகராக ஆனமை பற்றி அவர் நொந்துகொண்ட போதிலும், அவர் அந்தக் காரணத்தைக் கொண்டு ஓரிடத்தில் முடங்கிக் கிடக்க விரும்பவில்லை. இது பற்றித் தொகுப்பாசிரியர் எம். எஸ். எம். அனஸ் குறிப்பிடுவது மனங்கொள்ளத்தக்கது. ''பார்வையற்ற செய்கு அலாவுதீன் வீட்டிலேயே முடங்கிக் கிடக்கவில்லை. காடுகளில் அலைந்து திரிந்தார். இரவு வேளைகளில் நிலாக்காலத்தில் வல்லையன் வெளி என்ற ஊருக்கு புறத்தே இருந்த காட்டோர மணல் பரப்பில் நின்று பாடலிசைப்பார். இரவு முடியும் வரை அவர் குரல் ஒலிக்கும்'' தமது பாடல்களின் சிறப்பைப் பற்றியும் தன்னம்பிக்கையுடன் புலவர் கூறுவதுண்டு. 'செய்கலாவுதீன்கவியைச் செகத்திலுணரப் பாக்கியம்'' ''செய்கு அலாவுதீன் தமிழே ஜெகதலமீது பெருந் தணயே'' என்பன போன்ற பல தொடர்கள் புலவரது தன்னம்பிக்கை உணர்வைக் காட்டுகின்றன.

வழிவழிவந்த நாட்டாரிலக்கியத்தின் செழுமையும் புலமை நெறிநிற்கும் கவித்துவத்தின் போக்கும் இவரிடத்துச் சங்கமிக்கின்றன. அடிப்படையில் செய்கு அலாவுதீன் கிராமியப் பண்புகள் பொருந்திய ஒரு புலவராவார், இத்தகைய ஒரு கவிஞரின் படைப்புகளைத் தேடித் தொகுத்து சிறந்த ஆய்வுரையோடு தந்துதவிய எம். எஸ். எம். அனஸின் ஆய்வுப் பணி பாராட்டிற்குரியதாகும். இத்தகைய பணிகள் முஸ்லிம் கிராமங்களில் தொடர வேண்டும். மறைந்து போகும் நிலையிலுள்ள இலக்கியங்களை மீட்டெடுப்பதும் அவற்றை மீள்நிர்மாணம் செய்வதும் ஆய்வுப்பணிகளில் அடங்கும் ஓர் உயர் நடவடிக்கையாகும்.

## பொன்பரப்பியின் இயற்கை அழகு

அடர்ந்த பொன்பரப்பி வனத்தினிடையே ஆங்காங்கே பரந்து கிடக்கும் மனோரம்யமான வில்லுகள் இயற்கையின் இனிய அருட் கொடைகளாகும்.

ஆலம்வில், ஆத்தாள்வில், அமாதாரிவில் அமுதவல்லி வில், இருவில், இரணவில், விலமறவில், மயில்வில், மரைவில், மணவில், வண்ணாத்திவில், காளிவில், குமிழவில், தலைவில், பணிக்கர்வில், உப்புவில், பெரியவில், பெரிய நாகவில் சின்ன நாகவில், உப்புவில், கொக்காரிவில் எனப் பல அழகிய இயற்கை நீர் நிலைகள் இங்கு உள்ளன.

1869 ல் ஆங்கிலேய நிர்வாக அதிகாரி ஒருவர் இவ்வியற்கை அழகுபற்றி நிர்வாக அறிக்கையில் பின்வருமாறு கூறுகிறார்.

''பாதை நெடுக இருபுறமும் நீண்டு செல்லும் பசிய சோலை வனமும் அவற்றிடையே ஆங்காங்கே அமைந்துள்ள மிருகங்களுக்கும் மனிதருக்கும் தாகசாந்தியளிக்கும் 'வில்லு' என்று அழைக்கப்படும் இயற்கைக் குளங்களும் கால்நடையாகப் பயணம் செய்வதைப் பயனும் மகிழ்ச்சியுமுள்ளதாக்குகிறது.''

The Manual of the Puttalam District (1908)

# பொன்பரப்பி முஸ்லிம்களின் வாழ்வும் பண்பாடும்

★ எம். எஸ். எம். அனஸ்

1

இலங்கையின் வடமேல் மாகாணத்தில் புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள பொன்பரப்பி இலங்கை முஸ்லிம்களின் ஆதி குடியேற்றவரலாற்றோடு நெருக்கமான தொடர்புள்ள கேந்திரப் பிரதேசங்களில் ஒன்றாகும். இலங்கையின் பண்டைய நாகரிகத்திற்குரிய பகுதியெனக் கூறப்படும் அனுராதபுரம், புத்தளம், மன்னார் ஆகிய நகரங்களை உள்ளடக்கிய முக்கோணப் பிரதேசத்தினுள் இது அமைந்துள்ளதென்பதும் ஆரம்ப அறேபிய – முஸ்லிம் குடியேற்றமும் இம் முக்கோணப் பிரதேசத்தினுள்ளேயே நிகழ்ந்ததென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இஸ்லாம் அறேபியாவில் தோன்றுவதற்கு முன்னரே அறாபியரின் இலங்கையுடனான வர்த்தகத் தொடர்புகள் ஆரம்பமாகிவிட்டன. கி.பி. 7ம் நூற்றாண்டிலிருந்து அறாபிய இஸ்லாமியரின் தொடர்பை இலங்கையில் காணமுடிகிறது. கி. மு. 2-ம் நூற்றாண்டில் அறேபியரின் வர்த்தகத் தொடர்புகள் இலங்கையில் மிக ஆதிக்கம் பெற்று விளங்கியுள்ளன.

அறேபிய மூதாதையர் இந்திய மலபார்ப் பகுதிகளில் குடியேறி வாழ்ந்துள்ளனர். இது போலவே துறைமுகங்களைச் சூழ உள்ள இலங்கையின் முக்கிய பிரதேசங்களிலும் அறேபிய – முஸ்லிம் குடியேற்றங்கள் உருவாகின. கி. பி. 7-ம் நூற்றாண்டிலிருந்து அறேபியரும், உலகின் பல பாகங்களையும் சேர்ந்த முஸ்லிம்களும் காலத்திற்குக் காலம் வணிக நோக்கில் இப்பகுதிகளில் குடியேறி வாழ்ந்துள்ளனர்.

சேர். அலெக்சாண்டர் ஜோன்ஸ்டனின் (Sir Alexander Johnston) கூற்றுப்படி அறேபிய முஸ்லிம்களின் ஹாஷிம் பரம்பரையினர் கி. பி. 7-ம் நூற்றாண்டில் எட்டுப் பிரதேசங்களில் குடியேறினர். அவற்றுள் புத்தளம், குதிரைமலை, மன்னார் மாதோட்டம் ஆகிய பகுதிகளும் அடங்குகின்றன.

## குதிரைமலை

பொன்பரப்பியின் கடற்கரையோரத்தில் அமைந்துள்ள குதிரைமலை இலங்கையின் புராதன துறைமுகங்களில் ஒன்றாகும். கல்பிட்டியிலிருந்து வடகிழக்காக சுமார் 20 மைல் தொலைவிலும் அரிப்பிற்குத் தெற்கிலும் இது அமைந்துள்ளது. அரிப்பு மக்கள் நடமாட்டம் அதிகமாக இருந்த ஒரு பண்டைய நகராகக் குறிப்பிடப்படுகிறது. கி. பி. 2-ம் நூற்றாண்டில் உருவான தொலமி (Ptolemy)யின் புவியியல் வரைபடக் குறிப்புகள் அரிப்பு ஒரு காலத்தில் முஸ்லிம்களின் நடமாட்டம் அதிகமாயிருந்த முக்கியத்துவமுடைய நகராக இருந்திருக்கலாமென வலியுறுத்துகின்றன. தொலமியின் வரைபடத்தில் அரிப்பு 'Iogana Civitas' எனக்கொள்ளப்படுகிறது. அரிப்பும் தொலமி குறிப்பிடும் Magana Civitas மொடர் கமத்தாற்றுக்

கும் மறிச்சிக்கட்டிக்கும் அருகாமையாக அமைந்திருந்த நகரும் பொன்பரப்பிப் பற்று என்ற பெரிய பரப்பினுள் அடங்கி யிருந்தன[1]

தொலமியின் வரைபடத்தில் குறிப்பி டப்பட்டுள்ள 'Andirisimundi Promontorium' என்பது குதிரைமலை எனக்கருதப் படுகிறது.[2] குதிரைமலை என்பது மிகப் பழைமைவாய்ந்த சொல்லாகக் கருதமுடி யும். மலபார் செல்வாக்கு அப்பெயரை அதற்குத் தந்திருக்கக் கூடும். கிடைக்கக் கூடியபழைய நாட்டுப்புறப் பாடல்களிலும் புத்தளம், கல்பிட்டி, மன்னார் மக்களின் பேச்சிலும்'குதிரைமலை' என்றேஇப்பகுதி அறியப்படுகிறது. போர்த்துக்கேயர்காலம் முதல் தேசப்படங்களில் குதிரைமலை என்றேஇதுபொறிக்கப்பட்டுள்ளது. 1859ல் சேர். ஜேம்ஸ் எமர்ஸன்ட் டெனன்ட் (Sir Tennent; J. M.) இதைக் குதிரைமலை என்றே தனது வரலாற்றுக்குறிப்புகளில் எடுத்துக் கூறுகிறார். குதிரைமலையைப் பிளினியின் குறிப்புகள் ஹிப்போரஸ் (Hipporus) எனக் கூறுகின்றன. ஹிப்போரஸ் என்பதன் பொருள் குதிரைமலை என் பதாகும். டெனன்டின் வரலாற்று நூலில் இது பின்வருமாறு இடம் பெற்றுள்ளது.

'The road from Aripo to Putlam keeps close to sea as far as Kudramalie, a head-land whose name 'The mountain of the horse' assists to Identity with the Hippurus or Hipporos at which (According to Pliny) The freed man of Annius Plocamus landed.[3]

அறேபியர் மட்டுமன்றி வேறு பல தேசத்தவரும் அன்று குதிரைமலைத்துறை முகத்தை நன்கறிந்திருந்தனர். அக் காலத் தில் மன்னாரிலிருந்து நீர் கொழும்பு வரைக்குமான கரையோரப்பிரதேசத்தில் குதிரைமலையும், கல்பிட்டித்துறைமுக முமே வெளிநாட்டு வணிகர் வந்து செல்லு மிடங்களாக விளங்கியுள்ளன.

பொன்பரப்பியின் பிரதான தலமாகிய குதிரைமலை அறேபியரையும் பாரசீகரை யும் வெகுவாகக் கவர்ந்தது. குதிரைமலை அதன் துறைமுக அமைவினால்மட்டுமன்றி அது பெற்றிருந்த முத்துவியாபாரத்துக் குரியகேந்திரத் தன்மையினாலும் சிறப்புப் பெற்றிருந்தது. முத்து வியாபாரத்தில் பேரார்வம் காட்டிய அறேபியரும் பார சீகரும் அறேபிய வம்சவழிவந்த இந்திய முஸ்லிம்களும் குதிரைமலைத் துறைமுகத் திற்கு வியாபார நோக்கில் அடிக்கடி வந் தனர். அறேபியர் ஜபலுல்பர்ஸ் எனக் குதிரைமலையை அழைத்தனர்.

பொன்பரப்பிப் பிரதேசத்தில் பல சிதைந்த கட்டிடங்கள் காணப்படுகின்றன. அங்கிருந்து அறபிக் கல்வெட்டுக்களும் கிடைத்துள்ளன. கப்பல்கள் திசையறிந்து செல்வதற்காக ஆங்காங்கே கலங்கரை விளக்குகள் அமைக்கப்பட்டிருந்தன.மினா ராக்கள் என அவை அழைக்கப்பட்டன. இவ்வாறான மினாராக்கள் மன்னார்,திரு கோணமலை, காலி ஆகிய பிரதேசங் களில் அராபிய வணிகர்களால் அமைக்கப் பட்டிருந்தன[4] இத்தகவல்கள் பொன்பரப் பிப் பிரதேசத்தின் பண்டைய அறேபிய, பாரசீகச் செல்வாக்கைக் காட்டுவனவாக உள்ளன.

புராதன குடியிருப்பு மையம் என்ற நோக்கில் குதிரைமலைப் பகுதியை நேரடி யாகப் பார்வையிட்ட ஆர். எல். புரோஹி யர் (R L. Brohier) இப்பிரதேசத்தின் தொல் பொருள் மற்றும் அகழ்வாய்வுக் குரிய தேவையை அவர் வலியுறுத்திய தோடு அங்கு பெருமளவில் காணப்பட்ட புராதன மட்பாண்டம் முதலியவற்றின் சிதைவுகளைத் தொல் பொருளியல் திணைக்களத்திற்கு வழங்கினார்.[5]

13ம் நூற்றாண்டிற்கு முன்னர் இலங் கையின் முக்கிய துறைமுகங்களுள் சிறு துறைமுகங்களான குதிரைமலை,கல்பிட்டி புத்தளம், முல்லைத்தீவு என்பன சிறப் பிடம் பெறுகின்றன. குறிப்பாக இலங்கை யின் வெளிநாட்டு வர்த்தகத்தில் இத் துறைமுகங்கள் கணிசமான பங்களிப்பைச் செய்துள்ளன. 7ம் நூற்றாண்டு தொடக் கம் 15ம் நூற்றாண்டு வரை இப்பகுதிக ளில் இடம் பெற்ற வாணிபத்துக்கான

ஆதாரங்களில் கல்பிட்டியில் கண்டெடுக்கப்பட்ட செப்பு நாணயங்களும் செப்பு உருவங்களும் முக்கியமாகக் குறிப்பிடப்படுகின்றன.

குறிப்பாக 15ம் நூற்றாண்டுவரையும் இலங்கை முஸ்லிம்கள் வர்த்தகத்தையே தமது பிரதான தொழிலாகக் கொண்டிருந்தனர். குதிரைமலையிலும் மன்னாரிலும் முத்து வியாபாரம் செழிப்பாக நடந்தது. யானைகள் பிடிப்பதிலும் அவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதிலும் முஸ்லிம் வியாபாரிகளே முன்னின்றனர். பாக்கு ஏற்றுமதி வியாபாரமும் முஸ்லிம்களின் கைகளிலேயே இருந்தது. பாக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட துறைமுகங்களில் கல்பிட்டி முக்கியமாக குறிப்பிடப்படுகிறது.

போர்த்துக்கீசர் (1505) இலங்கையைக் கைப்பற்றிய போது வடமேல் மாகாணக் கரையோர முஸ்லிம்களின் கைகளிலிருந்த வளமிகுந்த முத்து வியாபாரத்தையும், யானை வியாபாரத்தையும் பாக்கு வியாபாரத்தையும் தமது ஆதிக்கத்திற்குள் கொண்டு வந்தனர். போர்த்துக்கேய, ஒல்லாந்தர் காலப்பிரிவில் முஸ்லிம்களின் வியாபாரச் செழிப்பில் பெரிய தாக்கம் நிகழ்ந்த போதும் சந்தர்ப்பம் வாய்த்த போது தமக்குப் பரிச்சயமான இவ்வியாபாரங்களைத் தொடர முஸ்லிம்கள் தயங்கவில்லை.

## முத்து

முஸ்லிம்களின் பாரம்பரிய வியாபார முயற்சிகளில் அந்நியராதிக்கம் குறிப்பிடத்தக்க பின்னடைவுகளை ஏற்படுத்தியது. சில இடைவெளிகளையும் வியாபாரத்திற்கான முடிகிறது. எனினும் முஸ்லிம் வியாபாரிகள் இடையிடையே தமது வர்த்தக முயற்சிகளைத் தொடர்ந்தே வந்துள்ளனர். குறிப்பாக 1850ன் பின் மீண்டும் முத்து வியாபாரத்தில் அறபிகள் உட்பட அதிகமான பிறதேச முஸ்லிம் வர்த்தகர்கள் ஈடுபட்டனர். மீண்டும் குதிரைமலையையும் அடுத்துள்ள முத்துவளமுள்ள பகுதிகளையும் வந்து சூழ்ந்தனர். நாகபட்டினம், கீழக்கரை, தொண்டி, அதிராய் பட்டினம் போன்ற இடங்களைச் சேர்ந்த வியாபாரிகள் பலர் இதில் பங்கு கொண்டனர். 1850ன் பின் சுறுசுறுப்பாக நடைபெற்ற இம் முத்து வியாபாரத்தில் கல்பிட்டி, எருக்கலம்பிட்டியைச் சேர்ந்த வியாபாரிகளும் அடங்கியிருந்தனர்.[6]

இவ்வகையில் குதிரை மலையும் அதைச் சூழ உள்ள பிரதேசங்களும் அறேபிய முஸ்லிம் குடியேற்றப் பகுதிகளாக ஆதியிலிருந்து விளங்கி வந்ததுடன் 20ம் நூற்றாண்டின் ஆரம்பத் தசாப்தம் வரை அவற்றின் முத்து மற்றும் வணிகச் செல்வாக்கினால் பிறநாட்டு முஸ்லிம் வியாபாரிகளைக் கவர்ந்த பிரதேசமாகவும் தொடர்ந்தும் இருந்து வந்துள்ளது எனக் கூறலாம்.

''குதிரை மலைக்காரனைச் சிந்து'' என்ற பாடலில் வரகவி செய்கு அலாவுதீன் (1890–1938) தமது பிரதேசத்தின் முத்துக்குளிக்கும் நிகழ்வுகளை பின்வருமாறு குறிப்பிடுவதையும் ஈண்டு கூறுவது பொருத்தமானது.

> சிப்பி குளிப்பதை தோணியில்
> ஏற்றுவதும்
> கப்பல் தோணிகளைச் சுற்றி
> நங்கூரமிட்டிறங்கி இருப்பதுவும் வெகு
> சிங்காரமாகவே கப்பியில்
> சாம்பிச் சரக்குப் பறிப்பதுவும்
> பல ஆடவர்கள் வந்து காத்து
> இருப்பதுவும்
> சிப்பி கொள்வார்களுமே
> தப்பித மற்றிட முத்தை எடுப்பாரும்
> சல்லி இருப்பார்களும் கோடியே
> விற்பதும்
> சிப்பிக்குள் முத்தில்லை என்று
> மொழிவாரும்
> சொல்ல முடியாத அற்புதநுட்பமே![7]

## குதிரைமலை ஒலி

குதிரைமலையில் அடங்கப்பெற்றுள்ள அவ்லியாவைப் போற்றி வரகவி செய்கு அலாவுதீன் இரு வழி நடைச் சிந்துகள் பாடியுள்ளார். அங்கு அடங்கப்பெற்றுள்ள அவ்லியாவின் பெயர் யாதென நிச்சயிக்க முடியவில்லை. எனினும் வரகவி

யின் குதிரைமலைப் பாடலில் 'கடலோரத்தில் வாவாப்பிள்ளை ஒலி கபுறு முண்டும்' என்ற வரியில் இடம்பெற்றுள்ள பெயர் குதிரை மலை ஒலியினுடைய தெனக் கருதலாம். 19ம் நூற்றாண்டில் குறிஞ்சிப்பிட்டியில் வாழ்ந்த ஷெய்கு இஸ்மாயில் புலவரும் தமது கப்பற்பாடலிலும் ஏனைய சிந்துக்களிலும் குதிரைமலை ஒலியைப் போற்றியுள்ளார். குதிரைமலை தர்ஹாவை மன்னார், கல்பிட்டி, புத்தளம் முஸ்லிம்கள் மிக நீண்ட காலமாக அறிந்திருந்ததோடு நேர்ச்சைகள் செய்தும் வந்தார்கள்.

இத் தர்ஹாவைப் பற்றி காசிச் செட்டி பின்வருமாறு கூறுகிறார். குதிரை மலையின் வடபாகத்தில் முகமதிய இறை நேசர் ஒருவரின் கபுறுஸ்தானத்திற்கு மேலாக ஓலைக்கிடுகுகளால் வேயப்பட்ட ஒரு பள்ளி காணப்படுகிறது. அவ்வழியினாற் செல்லும் கடலோடிகள் அத் திருத்தலத்தில் தரித்து நேர்ச்சைகள் செய்தே தமது பயணத்தைத் தொடருகின்றனர்[8].

II

## பொன்பரப்பிக் கிராமங்கள்

1831ம் ஆண்டின் புள்ளி விபரப்படி பொன்பரப்பிப்பற்றுக் கிராமங்களில் 498 பேர் வாழ்ந்துள்ளனர். புத்தளத்திற்கு வடக்கே ஆறுமைல் தொலைவில் அம்பலம் என்ற கிராமத்தில் சிறுமண் குடிசைகளில் வாழ்ந்து வந்த முஸ்லிம்களைப் பற்றி காசிச் செட்டியின் குறிப்புக்கள் கூறுகின்றன. இங்கு வாழ்ந்த மக்கள் கடலையும் சிறிதளவு நெற்செய்கையையும் வேட்டையையுமே நம்பி வாழ்ந்துள்ளனர். இலவன்குளம் கிராமமும் இப்பிரதேசத்தின்பழைய முஸ்லிம் குடியிருப்புக்களில் ஒன்றாகும்.

### கரைத்தீவு

கரைத்தீவு பொன்பரப்பிப் பற்றில் உள்ள மற்றொரு பழமையான முஸ்லிம் கிராமமாகும். இது தீவு என்று குறிப்பிடப்பட்டாலும் தீவு அல்ல. கல்பிட்டிக் கடனீரேரிக்கு அக்கரையில் இருப்பதனால் 'கரைத்தீவு' என்ற பெயர் ஏற்பட்டிருக்கக் கூடும். 17ம் நூற்றாண்டிலிருந்து இக்கிராமத்தின் தோற்றத்தை அவதானிக்க முடிகிறது. அரிப்பு மற்றும் மறிச்சிக் கட்டியூடாக வந்த மன்னாரையும், தென்னிந்தியாவையும் சேர்ந்தவர்களே இக்கிராமத்தின் முதற்குடியேற்றவாசிகள் எனக் கருதலாம். குறிப்பாக அதிராம் பட்டினம் அம்மாபட்டினம் கீழக்கரையைச் சேர்ந்தவர்கள் இம்முதற் குடியேற்றவாசிகளில் அடங்கியிருக்கலாம்[9].

பெரும்பாலும் உப்புச் செய்கையை நம்பியே இக்குடியேற்றம் நிகழ்ந்திருக்க வேண்டும். பொன்பரப்பியின் வனவளமும் கடல் நீரேரியும் அவர்களின் அன்றாட ஜீவனோபாயத்திற்கு தொடர்ந்து உதவின.

### மரைக்கார் ஆட்சி

கல்பிட்டிச் சீமான்களுக்குச் சொந்தமான நிலப்பகுதிகளிலேயே கரைத்தீவுக் கிராமம் உருவாகியது. பொன்பரப்பிப் பற்றில் கல்பிட்டி மரைக்காரர்களுக்கு ஏராளமான நிலப்பரப்பு சொந்தமாக இருந்தது. இதனால் கல்பிட்டியின் ஏனைய பகுதிகளைவிடக் கரைத்தீவில் மரைக்கார் ஆதிக்கம் தீர்க்கமான பரிபாலன முறையாக அமைந்தது. நில உடைமையாளரும் குடிகளும் போன்ற ஒரு தொடர்பு இதில் தெளிவாகப் புலப்பட்டது. எனினும் தற்போதைய ஆய்வு இத் தொடர்பு பற்றியதல்ல.

தாக்கம் மிகுந்த ஒரு பரிபாலன முறையை கல்பிட்டி மரைக்கார்கள் இங்கு நடைமுறைப்படுத்தினர். கல்யாணம் முதல் கந்தூரிவரை மரைக்காரின் அனுமதியைப் பெறுவது கட்டாய வழக்கமாக இருந்தது. மரைக்காரின் ஆணைக்கும் ஆலோசனைக்கும் ஊர் கட்டுப்பட்டது. மரைக்கார் ஆட்சியில் கல்யாணத்தை மாத்திரம் உதாரணத்திற்கு எடுக்கலாம்; கல்யாணம் நடைபெறமுன்னர் சம்பந்தப்பட்டவர்கள் மரைக்காரை 101 வெற்றிலை 101 பாக்கு முதலியவற்றுடன் சென்று அவரது அங்கீகாரத்தைப் பெற்றனர். கல்யாணக் கடுத்

கும் நண்பர்களுக்கும் இலவசமாகப் பகிர்ந்தளித்துவிட்டு மீதியைத் தமது தேவைக்காக வைத்துக்கொள்வர்.

அன்று வேட்டை வியாபார நோக்கில் அன்றி ஊரின் பொது உணவுத் தேவைக்காகவும் சுய தேவைக்காகவும் மட்டுமே நடைபெற்றது. மீன் பிடிப்பவனும் ஊருக்குள் தனது வியாபாரத்தை ஆரம்பிக்கும் முன் கடற்கரைக்கு வருவோருக்கு இனாமாக கறி மீன் வழங்கும் வழக்கமும் அன்று இருந்தது. நெற்செய்கையாளனிடமும் இந்தப்பண்பை அன்று காண முடிந்தது. இவை இன்று மிகவும் அருகிவிட்டன.

## நெல்விதைப்பு

அன்று சிறிய அளவில் நடந்த நெல் விதைப்பு பெரிதும் சொந்த உணவுத் தேவைக்காகவே நடைபெற்று வந்தது. நல்ல நாள் பார்த்து நேர்ச்சைகள் வைத்தே நெல்விதைப்பு ஆரம்பமாகும். 'வியாழன் விதைப்பு வெள்ளி அறுப்பு' என்று அவர்களிடையே வழங்கும் பழமொழி ஒன்று கூறுகிறது. சூடுமிதிக்கும் போது பொங்கலிடுவர். களத்தில் நெல்லை விற்கமாட்டார்கள். ஆனால், களத்திற்கு வருவோருக்கு நெல்லை இனாமாகக் கொடுப்பர்.

நெல் வீடு வந்ததும் பள்ளிவாசலுக்குப் புது நெல்லுச் சோறு ஆக்கி அனுப்புவார்கள். அதன் பின்னர் உறவினர்களுக்கும் ஊர்ப் பெரியவர்களுக்கும் இலவசமாக நெல்லை அனுப்பிவைப்பார்கள். மீதி நெல்லை தமது சொந்த தேவைக்காக வைத்துக்கொள்வார்கள். இன்று இந்த வழக்கங்கள் அருகிவருகின்றன. களத்திலேயே நெல் விலைப்படுத்தப்பட்டுவிடுகின்றது.

## யானை பிடித்தல்

காலத்திற்குக் காலம் சிறப்பாகப் பேசப்பட்ட இலங்கையின் செல்வத்திற்கும், புகழுக்கும் மாணிக்கக்கற்களும், முத்துக்களும் மாத்திரமன்றி யானைகளும் காரணமாயிருந்தன. கடந்தகால இலங்கை வரலாற்றில் யானை வியாபாரத்திலும் யானைகட்டுவதிலும் முஸ்லிம்கள் சிறப்பானதொரு இடத்தைப் பெற்றிருந்தனர். வடமேல் மாகாணத்தில் இவர்களின் இச்செல்வாக்கை நன்கு அவதானிக்க முடிகிறது. இலங்கை வரலாற்றேடுகளில் யானை பிடித்தல் பற்றி பரவலான தகவல்களைப் பெறக்கூடியதாக இருந்த போதும் அதில் வடமேல் மாகாண முஸ்லிம்களின் யானை பிடித்தல் பற்றி மிகச் சிறிதளவே குறிப்பிடப்பட்டுள்ளன.

கரைத்தீவிலும், பொன்பரப்பிப் பற்றிலும் வாழ்ந்தோரில் யானைபிடிப்போருமிருந்தனர். மன்னார் மாவட்டத்திலும் யானை பிடிப்போர் அதிக அளவில் இருந்தனர். எனினும் மன்னார் மாவட்ட யானை பிடித்தல் பற்றி நாம் மிக அற்ப அளவே அறிந்துள்ளோம் என்று இ. பி. டென்ஹாம் (E. B. Denham) கூறுவது பொன்பரப்பிக்கும் பொருந்தும். வடமேல் மாகாணம் யானை வியாபாரத்தில் பிரசித்தி பெற்றிருந்தது. 1888ல் ஜபல்பூர் பிரத்தியேக ஆணையாளர் அப்துல்கான் வடமேல் மாகாணத்தில் 40 யானைகளைப் பிடிப்பதற்கு அனுமதி பெற்றிருந்தார்[10].

மன்னார் மாவட்டத்திலும் பொன்பரப்பியிலும் எத்தனை முஸ்லிம்கள் இத்தொழிலில் ஈடுபட்டிருந்தனர் என்பது பற்றி சரியான புள்ளி விபரங்களில்லை. எனினும் இ. பி. டென்ஹாமின் குறிப்புக்கள் தரும் தகவல்கள் முக்கியமானதாகும். மன்னார் வரிவிதிப்பு ஆணையாளர் 1816ம் ஆண்டு அறிக்கையில் 183 பேர் இத்தொழிலில் ஈடுபட்டிருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். 'யானை பிடித்தல்' தொழிலுக்கென்றே பிறப்பிலிருந்தே பயிற்றப்பட்ட பிரத்தியேக வகுப்பினர் இவர்கள் என்று ஆணையாளர் குறிப்பிடுகிறார். 1912ல் மன்னாரில் 30 பணிக்கர்களும் (Panikans) 40 அண்ணாவிகளும் இவர்களுக்கு உதவியாக 180 பேரும் இருப்பதாக அக்கால அரசாங்க அறிக்கை கூறியதுடன் மன்னார் மாவட்டத்தில் இத்தொழிலில் ஈடுபட்டிருந்தவர்கள் அனைவரும் இலங்கைச்சோனகர் என்றும் அவ்வறிக்கை கூறுகிறது. முக்கியமாக இவர்கள் முசலியையும் நானாட்டானையும் சேர்ந்தோராவர்.[11]

கரைத்தீவில் வாழ்ந்த யானை கட்டு வோரின் யானை கட்டும்முறையினைப்பின் வருமாறு விபரிக்கலாம்: யானை கட்டு வோர் 'பணிக்கர்' என அழைக்கப்பட் டனர். பணிக்கனுக்கு உதவ அண்ணாவி களும் உதவியாளருமிருந்தனர். அண் ணாவி முறை பணிக்கனுக்கும் தெரிந்தி ருந்தது. மந்திரம், மடைபோடுதல் முதலி யவற்றை யானை கட்டுவோர் அறிந் திருக்கவேண்டியிருந்தது. முழுக்காட் டையும் மந்திரத்தால் கட்டவும், எதிர்க்க வரும் யானையை மந்திரத்தால் தடுக்க வும், ஏன் சாகடிக்கவும் அவன் ஆற்றல் பெற்றிருந்தான். யானை பிடிப்பதற்குக் காட்டிற்குச் செல்லு முன்னர் மடை போட்டு, மந்திர உச்சாடனங்கள் செய்து, 'யானைக்காதல்' என்ற வழி நடைச் சிந்தை ஒத்த நீண்ட பிரார்த்தனைப் பாடலைப்பாடி இறைவனையும், அவ்லி யாக்களையும் முன்னிறுத்தி நேர்ச்சை களும், பிரார்த்தனைகளும் செய்தே பணிக் கன் தனது பணியை ஆரம்பிக்கிறான்.

மன்னாரில் 'யானைக்காதல்' பாடல் இன்றும் உள்ளது. வரகவி செய்கு அலாவு தீனும் 'யானைக்காதல்' பாடியுள்ளதாக அறிய முடிகின்றது. யானை பிடித்தலில் ஈடுபடுவோர் காட்டில் உயிராபத்து நேராது இறைவனையும், இறைநேசரை யும் வேண்டிப்பாடும் ஒருவகைச் சிந்து இது. கரைத்தீவு யானை பிடிப்போரும் இப்பாடலைப் பாடியே தொழிலை ஆரம் பித்தனர்.

நெய்னா முஹம்மது முஹம்மது காசீம் பணிக்கர் கரைத்தீவில் வாழ்ந்த யானை பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டவர்களில் முக்கியமாகக் குறிப்பிடப்படுகிறார். அர சாங்க அனுமதிப்பத்திரத்துடனேயே இவர் கள் யானை பிடிப்பதில் ஈடுபட்டனர். 'மட்டம்' என்று கூறப்படும் குறிப்பிட்ட உயரமுடைய யானைகளை மட்டுமே கட்டுவதற்கு அரசாங்கம் அனுமதி தந் தது. கொம்பன் யானையையும், தாய், குட்டி யானைகளையும் கட்டுவதை அர சாங்கம் தடுத்திருந்தது.

முஹம்மதுகாசீம் பணிக்கரின் சிரேஷ்ட புதல்வர் எம். சீ. அப்துல் ஹமீத் தமது தந்தையாரின் யானை பிடிக்கும் முறை களைப் பற்றி பின்வருமாறு கூறுகிறார். கரைத்தீவு முஹம்மது காசீம் பணிக்கர் 16 யானைகளைப் பிடித்துள்ளார். இவ ரும் கரைத்தீவைச் சேர்ந்த வேறு யானை பிடிப்போரும் யானை பிடிக்க (1) பொறி வைத்துக் கட்டுதல் (2) துரத்திப் பிடித் தல் என்ற இரு முறைகளைக் கையாண் டுள்ளனர்.

## பொறி வைத்துக் கட்டுதல்

கண்ணி வைத்தல் என்பது $1\frac{1}{2}$ அடி ஆழத்தில் குழிதோண்டி படுகிடங்கமைத்து கண்ணி வைக்கப்படும். கிடங்கின் முன் னால் ஒரு கட்டை போடப்படும். மரக் கட்டையைத் தாண்டி யானை காலை வைக்கும் போது கண்ணி இறுகும். கண் ணிக்கயிறு பத்திரமாக ஒரு மரத்தில் கட்டப்பட்டிருக்கும். யானை கட்டும் கயிறு 'விசைக் கயிறு' என்றும் கயிறு கட்டப்பட்டுள்ள மரம் 'பூட்டுமரம்' என் றும் கூறப்படும். இந்த யானை கட்டும் முறை அனுராதபுரக் காட்டில் அப்துல் கான் 1888ல் பயன் படுத்திய அதே முறையை ஒத்ததாகும்.

"Abdul khan was trapping elephants to export to India for sale The way he noosed elephants was to lay a noose over a hole about $1\frac{1}{2}$ foot deep in their path, supported by small sticks, which gave, way when the elephant put his foot on it and he lifted it again rope tightened and he was caught.

(See, The manual of the Puttalam District, P. 100)

கட்டப்பட்ட யானையை உரிய இடத்துக் குக் கொண்டுவருவதை 'கழியல்' என்பர்.

இரண்டாவது முறை துரத்திப் பிடித் தலாகும். இது ஒரு ஆபத்தான முறை யாகும். சில சந்தர்ப்பங்களில் மட்டுமே யானையைத் துரத்திப்பிடிப்பர். யானை கள் கூட்டமாகப் படுத்துறங்கும் இடத் திற்குச் சென்று முதலில் யானைகளைக் கலைத்து சிதறி ஓடச்செய்வர்.

அவ்வாறு யானைகள் கலைந்து ஓடும் போது ஓடும் யானையின் இடது காலில் கண்ணியிட்டுப் பிடிக்கவேண்டும்.

யானை பிடிக்கச் செல்வோர் தாம் ஒரு உயிராபத்தான யுத்தமொன்றில் ஈடுபட்டிருப்பதாகக் கருதினர். மரணத்தை அவர்கள் தீர்க்கமாக எதிர்பார்த்தனர். இதனால் அவர்கள் தமது இறுதிக்கிரியைகளுக்கான பொருட்களையும் உடன் கொண்டு சென்றனர். உயிராபத்து நேர்ந்தால் அங்கேயே அடக்கம் செய்யப்பட வேண்டும் என்பதே அவர்கள் விருப்பமாகும்.[12] யானையினால் அடிக்கப்பட்டுப் பிணமாக ஊர்வந்து சேர்வது தமது வீரத்துக்கு இழுக்கென அவர்கள் கருதினர் போலும்.

## வைத்தியம்

அக்காலத்தில் தென்னிந்தியாவைச் சேர்ந்த சில வைத்தியர்கள் இங்கு தங்கியிருந்து வைத்தியம் செய்ததுடன் சிலருக்கு வைத்தியத் தொழிலைக் கற்றுக் கொடுக்கவும் செய்தனர். பழைய வைத்திய முறையைப் பேணி வந்த ஒரு வைத்திய பரம்பரை கரைத்தீவிலிருந்து வந்தது. அவர்களுள் சுமார் 150 வருடங்களுக்கு முன் வாழ்ந்த முக்குத்தார் பரியாரி சிறப்பாகக் குறிப்பிடப்படுகிறார். பின்னர் இவரது பரம்பரையில் வந்த ஹமீது முஹம்மது ஸரிபு (விதானையார்) முக்குத்தாரின் ஏடுகளைப் படித்து வைத்தியம் செய்து வந்தார். இவரது தம்பி ராவுத்தர் நெய்னா மரைக்கார் (கச்சி மரைக்கார்) பழைய ஏடுகளை வைத்து தற்போது வைத்தியம் செய்து வருகின்றார்.

இவர்களைத் தவிர நெய்னாமரைக்கார் (காந்தி அப்பா) பெரிய லெப்பை (அண்ணாவி அப்பா) மம்மலிமரைக்கார் போன்றோர் வைத்தியத்தொழில் செய்து மறைந்தவர்களாகும். இலவத்தம்பி, முஹம்மது ஹனிபா, ராவுத்தர் நெய்னா போன்றோர் தற்போது வைத்தியம் செய்து வருகின்றனர். பொதுவாக இவ் வைத்தியர்களில் சிலர் வைத்தியத்துடன் மந்திரம், மடைகளுடன்கூடிய அண்ணாவித் தொழிலிலும் தேர்ச்சி பெற்றிருந்தனர்.

## கல்லடி தர்ஹா

கரைத்தீவிலிருந்து சுமார் ஒன்றரை மைல் தொலைவில் கல்லடிதர்ஹா அமைந்துள்ளது. குடியேற்றம் ஆரம்பமாகிய காலத்திலிருந்தே மக்கள் இதைப் போற்றி வருகின்றனர். முருகைக் கற்கள் காணப்படுவதால் இவ்விடம் 'கல்லடி' எனப்பெயர் பெற்றது. அங்கு அடங்கப் பெற்றிருப்பவர் நாமமும் 'கல்லடி ஒலி' என இடப்பெயரினாலேயே இன்றுவரை அழைக்கப்பட்டு வருகிறது. ஆரம்பத்தில் ஓலையால் வேயப்பட்ட சிறு கபுறுஸ் தானமாகவே இது இருந்துள்ளது.

நூற்றாண்டுப் பழமை வாய்ந்த புகழ் பெற்ற 'கல்லடிப்பள்ளி' கந்தூரி பல வெளியூர்களுக்கும் இதன் புகழை எடுத்துச் சென்றது. இது தவிர தீராத நோய்களால் அவதியுறுவோர் சுகம் பெறுவதற்காக பல ஊர்களிலிருந்தும் வந்து, இத் தர்ஹா அருகில் 'கொட்டுக்கட்டி' உத்தரவுக்காக காத்திருக்கும் வழக்கமும் இருந்தது. தற்போது இவ்வழக்கங்கள் பெரிதும் அருகிவிட்டன.

வரகவி செய்கு அலாவுதீன் கல்லடி தர்ஹாமீது பாடியுள்ள 'கல்லடி நாதர் கழலடி தொழுதிட வழிநடவாமயிலே' என்ற புகழ் பெற்ற பாடலில் கல்லடி தர்ஹா ஆதியில் கிடுகினால் வேயப்பட்டதென்பதையும், மக்கள் கெதி பெற தர்ஹாவை நாடி வந்ததையும் பின்வருமாறு கூறுகின்றார்.

'புதிய கிடுகினால் வேய்ந்ததிலுறைந்தார்
புண்ணிய றொலியுல்லா நம்துயர்
தொலைத்தார்
கெதி பெற வருபவர் நேர்த்திகள்
கொடுத்தார்.

வரகவியும் தமது பாடலில் ஒலியின் பெயர் யாதெனக் கூறவில்லை. செய்கு அலாவுதீனின் சீடரும் கவிஞருமான காலம் சென்ற கரைத்தீவு சேக்கமரைக்கார் கல்லடி தர்ஹா மீது இரு சிந்துகள் பாடியுள்ளார். அதில் ஒரு பாடலில் நோய் தீரவென்று கல்லடிதர்ஹா அருகில் நீண்ட

பாக நடக்கும். இனம் சனத்தார்கள் இதில் கலந்து கொள்வர். இதைத் தொடர்ந்து 'புலால் விடும்' நிகழ்ச்சி நடக்கும். ஏழுநாட்களின் பின்னர் புலால் (மீன்) கறியுடன் விருந்து நடப்பதையே இது குறிக்கும். இந்த விருந்திற்கான முழுச் செலவையும் மாப்பிள்ளை வீட்டாரே ஏற்றுக்கொள்வர். இது புத்தளத்தின் எல்லா பகுதிகளிலும் நடைபெற்ற ஒரு பழைய சடங்காகும். இன்று இது நடைபெறுவதில்லை. [13]

கலை கலாசார அம்சங்களை இச் சந்தர்ப்பத்தில் விரிவாகப்பார்க்க முடியாது. சிலம்பம், கோலாட்டம், பெருநாட்டினங்களில் 'பெண்கள் கூடும்' மணல் விளையாட்டு (சந்தி என்றும் கூறுவர்) கும்மி, ஊஞ்சல் என்று பலவற்றை இங்கு சுட்டிக்காட்ட முடியும். புத்தகம் படித்தல் பொருள் சொல்லுதல் (புராணபடனம்) சிறப்பாக நடைபெற்ற பகுதிகளில் கரைத்தீவும் ஒன்றாகும். தற்கால நாகரிகத்தோடு இப்பழம் பண்பாடுகள் எதுவுமே தாக்குப்பிடிக்க வழியின்றி மெல்லச்செத்து விட்டன. கோலாட்டம் மாத்திரம் அங்கு மிங்குமாக உயிருக்கு ஊசலாடி வருகிறது என்று கூறலாம்.

## குறிப்புக்கள்

1. J. R. Sinnathamby, Ceylon in ptolemy's Geography, Colombo, 1968 P. P. 30. 31 Ethnological Survey of the Muslims of Sri Lanka வில் இடம்பெற்றுள்ள A Denis N. Fernando வினது அறிமுகக் குறிப்பைப் பார்க்கவும்.
2. J. R. Sinnathamby, P. 32.
3. J. E. Jennent, Colombo, Ceylon, 1859.
4. கே. எம். எச். காலிதீன் 'இலங்கை முஸ்லிம்களின் வரலாறு, கொழும்பு *1986, ப. 19*
5. A. L. Brohier Notes on an ancient Habitation near Kudiramali-Journal of Royal Asiatic Society (Ceylon) Vol XXXI 1923, P. P. 338. 397.
6. கி. பி. 7ம் நூற்றாண்டிலிருந்து ஆங்கிலேயர் காலம் வரைக்குமான இக் கட்டுரையின் வரலாற்றுக் குறிப்புக்கள் பின்வரும் நூல்களின் கட்டுரைக்கான ஆதாரமாகக் கொண்டுள்ளன.
   i. An Ethnological Survey of the Muslims of Sri Lanka, published by the Sir Razik Fareed Foundation, 1986.
   ii. M. A. M. Shukri, Muslims of Sri Lanka, - Aevenues, to Anti quity, Sri Lanka, 1986.
7. எம். எஸ். எம். அனஸ், வரகவி செய்கு அலாவுதீன் பாடல்கள்– தொகுப்பும் ஆய்வும், முஸ்லிம் சமய இராஜாங்க அமைச்சு, இலங்கை, *1991.*
8. Simon Casie Chity, The Ceylon Gazettee, Ceylon, 1834 P. 143
9. கீழ் காணும் கூற்றையும் இதனோடு நோக்கலாம்:
   *''இது (கரைத்தீவு) தீவு எனும் பெயருடையதாயினும் தீவன்று. கரையோரத்திலிருக்கும் ஒரு சிறு துறைமுகம். இஃது உப்பளமும்ஆம். இதனையும் இதனைச் சூழ்ந்த இலவன்குளம் அம்பலம், கரடிப்பூவல் எனப் பெயரிய கிராமங்களையும் 'பொன்பரப்பிப்பற்றென்று' பல்லாண்டுகளுக்கு முன் அழைத்து வந்தனர் அவ்வூரார். இற்றைக்கு 200 வருடங்களுக்கு முன் சில தென்னிந்தியர் இந்நாட்டிற் குடியேறினர். (ஆ. வி. மயில்வாகனன், புலவர் ஆற்றுப்படை 1946 ப. 13.)*
10. Frank modder, manual of the Puttalam District, Colombo. 1908 P. 100
11. E. B. Denham Census of 1911, Colombo. 1912 P. P. 463, 69
12. பொன் பரப்பியில் யானை பிடிக்கும் முறையினைப் பற்றிய தகவல்களை எம். சி. அப்துல் ஹமீது, A. V. T. அஸீஸ் ஆகியோர் தந்துதவினர்.
13. பொன்பரப்பித் திருமண சம்பிரதாயங்கள் பற்றிய தகவல்களைப்பெற M. S. S. பரிணா B. A. அவர்கள் உதவினார்.

# பொன்பரப்பியின் பொருளாதாரம்

— Z. A. ஸன்ஹீர் B. A. (பொருளியல்) —

புத்தளம் கடனீரேரியை மேற்கு எல்லையாகவும் வில்பத்துக்காட்டை வட எல்லையாகவும் கொண்டு புத்தளம் நக ருக்கு வடக்கே உலர் வலயத்தில் அமைந் துள்ள பொன்பரப்பிப் பிரதேசத்தின் பொருளாதார நடவடிக்கைகளை அப் பிரதேசத்தின் புவியியற் பௌதீகச் சூழல் கள் நிர்ணயிக்கின்றன. இப்பிரதேச மக் களின் பொருளாதாரம் முதனிலைத் துறையை அடிப்படையாகக் கொண்ட தாகும். பிரதானமாக வேளாண்மை, கடற்றொழில் என்பனவற்றுடன் காட் டுத்தொழில், சில்லறை வர்த்தகம் என் பனவற்றையும் இப்பிரதேசவாசிகள் தமது வாழ்வாதாரத் தொழில்களாகச் செய்து வருகின்றனர். இப்பிரதேச மக்கள் வறுமைக் கோட்டைச் சூழ்ந்த வருமான முடையோராவர்.

## தெங்கு

தென்னை முக்கோணத்தின் ஒரு கோடியில் இப்பிரதேசம் அமைந்துள்ள தால் இப்பயிருக்குத் தேவையான மிகப் பொருத்தமான புவியியற் காரணிகள் இல்லையென்றபோதும் இப்பிரதேச மக் களின் பிரதான பொருளாதார நட வடிக்கைகளுள் ஒன்றாக தெங்குச்செய்கை விளங்குவது குறிப்பிடத்தக்கது. 1960களில் அமுலாக்கப்பட்ட 5 ஏக்கர் திட்டத்தின் கீழ் இப்பகுதி மக்கள் காணிகளைப் பெற் றுக்கொண்டு தெங்குச் செய்கையை ஆரம் பித்தனர். ஆரம்பத்தில் இக்காணிகளில் தெங்குடன் மா, பலா போன்றன சாகுபடி செய்யப்பட்டபோதும் தெங்கிலேயே கூடிய கவனம் செலுத்தப்பட்டது. இன்று இங்கு ஒரு குடும்பத்திற்கு சராசரியாக இரண்டு ஏக்கர் தென்னங்காணி உள்ளது. சுமார் இரண்டு மாதத்திற்கொருமுறை பறிக்கப் படும் தேங்காய்கள் நேரடியாக நுகரப்படு வதுடன் கொப்பராவுக்காகவும் பயன் படுத்தப்படுகின்றன. தெங்குடன் தொடர் புடைய தும்பு, ஓலை போன்ற கைத் தொழில்கள் பகுதிநேர தொழில் முயற்சி களாக வளர்ச்சியுற்று வருகின்றன. இது இப்பிரதேச மக்களுக்கு நேரடி மறைமுக தொழில் வாய்ப்புகளை வழங்கி வருகின் றது. இச்செய்கையை விருத்தி செய்வதில் மீள்நடுகைக்கான மூலதனப் பற்றாக்குறை அரச மானியங்களை உரிய காலத்தில் பெறமுடியாமை போன்றவைகளுடன் தொடர்ச்சியான சாதகமான காலநிலைத் தன்மையின்மையும் பிரச்சினைகளாகக் காணப்படுகின்றன. இதனால் தனியே தென்னையை மட்டும் நம்பியிருந்த குடும் பங்கள் பொருளாதாரப் பின்னடைதலுக் குள்ளாதலையும் அவதானிக்கக் கூடியதா யுள்ளது.

இப்பிரதேசத்தில் பனைமரம் திட்ட மிட்ட ரீதியில் வளர்க்கப்படாதபோதிலும் அது இப்பகுதியில் பெருமளவு காணப்படு கிறது. இதிலிருந்து முழுமையான பயன் பாட்டைப் பெறக்கூடிய வகையில் பனை அபிவிருத்திச் சபையினால் இப்பகுதி மக் களுக்காகப் பயிற்சி நெறியொன்று ஆரம் பிக்கப்பட்டுள்ளது. வருடாந்தம் 26 பெண் பிள்ளைகள் ஒரு கொடுப்பனவுடன் இங்கு பயிற்றுவிக்கப்படுகின்றனர். பயிலுனர் களால் உருவாக்கப்படும் பொருட்களை இச்சபையே கொள்வனவு செய்கிறது. இதன் மூலம் மாதாந்தம் ரூபா 750-1000 வரையான வருமானம் ஈட்டக்கூடியதா யுள்ளது. இப்பயிற்சிநெறியை மேற்கொள் வதற்காக நிரந்தர கட்டடமின்மை இவர் கள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினை யாகும்.

டல்

''மச்சம் பிடிப்போருக்கு மிச்ச மில்லை'' என்ற கூற்றை பொய்ப்பிக்கும் அளவுக்கு கடற்றொழில் இன்று இப்பிர தேசத்தில் சிறப்புற்று விளங்குகிறது. மீனுடன், நண்டு, இறால் போன்றனவும் சூழவுள்ள கடலிலிருந்து தாராளமாகக் கிடைக்கின்றன. இன்று இவற்றுக்குள்ளே சர்வதேச ரீதியான சந்தை வாய்ப்புக்கள் இத்தொழிலில் ஈடுபடுவோரின் வரு மானத்தை மேம்படுத்தியுள்ளன. வரு மானம் மிகையாயிருந்த போதும் ஒரு பருவகாலத் தொழிலாகவே இது உள்ளது. மீன் பிடியில் பெரும்பாலும் பாரம்பரிய அல்ல பழம் முறைகளே பின்பற்றப்படுகின் றன. கரைத்தீவு கிராமத்தில் சுமார் 75 இயந்திரப்படகுகளும் 150 கட்டுமரங்களும் தொழிலில் ஈடுபடுத்தப்படுகின்றன.

கடலுடன் தொடர்புடையதே உப்புச் செய்கையுமாகும். கரைத்தீவு கிராமத்தில் அமைந்துள்ள உப்பளம் அக்கிராம மக்கள் சிலரின் வருமான மூலாதாரங்களுள் ஒன் றாயுள்ளது. உப்பு வாய்க்கால்கள் ஆரம் பத்தில் கல்பிட்டி மரைக்கார்மார்களுக் கும் விரல்விட்டு எண்ணக்கூடிய சில உள் ளூர் வாசிகளுக்கும் சொந்தமாக இருந் தன. அவர்கள் இக்கிராமத்தவர்களின் உழைப்பைப் பயன்படுத்தி உற்பத்தியில் ஈடுபட்டு இலாபமீட்டினர். பெரும்பாலும் ஊழியத்திற்குச் சன்மானமாக உணவுப் பண்டங்களே வழங்கப்பட்டன. பின்னர் நீண்ட காலம் கவனிப்பாரற்றுக்கிடந்த இவ்வாய்க்கால்கள் 1970 இன் ஆரம்பத்தில் கிராம முன்னேற்றச் சங்கத்தலைவரா யிருந்த ஜனாப் S. M. A. அஸீஸின் முயற்சிகாரணமாக மீண்டும் செய்கை பண்ணப்பட்டன. 1976 ல் இவ்வாய்க்கால் கள் ஊர்மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட துடன் 1979 ல் அதற்கான உரிமைப்பத் திரங்களும் வழங்கப்பட்டன. உப்புச்செய் கையைத் தொடர்ச்சியாக மேற்கொள் ளாதவிடத்து வாய்க்கால்களும் பழுதடை யும். கரைத்தீவிலுள்ள 60 வாய்க்கால்களும் இந்நிலையிலேயே இன்றுள்ளன. தற்போது பின்பற்றப்படும் வருடத்திற்கு ஒருமுறை உப்பு விளைவித்தல் முறைக்கு மாறாக மூன்றுதரமாவது செய்கை பண்ணப்படும் அளவுக்கு நடவடிக்கைகள் மேற்கொள் ளப்படல் வேண்டும். இதனால் தற்போது ஒரு வாய்க்காலில் சராசரியாக 750 அந் தர் உப்பு செய்கை பண்ணப்படும் நிலையை பன்மடங்கு அதிகரிப்பதற்கு வாய்ப்புண்டு. இதன் மூலம் கரைத்தீவின் பொருளாதார நிலை மேலும் மேம்படும் என எதிர்பார்க்கலாம்.

பொன்பரப்பியில் ஆடு, மாடு, கோழி வளர்ப்பு போன்றன பெரும்பாலும் வீட் டுத் தேவைகளுக்காகவே மேற்கொள்ளப் படுகின்றன. இப்பகுதி கால்நடை வளர்ப்புக் கும் மிகவும் உகந்ததொரு பிரதேசமாகும். ஏராளமான கால்நடைகள் இப்பகுதியில் இருந்தபோதும் குறிப்பாக கரைத்தீவில் மட்டும் சுமார் 1500 மாடுகள் இருந்த போதிலும் நிறுவன ரீதியான ஒரு அமைப்போ, அதற்கான வழிகாட்டலோ இல்லாததால் இப்பிரதேச மக்கள் அதி லிருந்து முழுமையான பயனைப்பெறமுடி யாத நிலையிலுள்ளனர். 1975 களில் கரைத்தீவில் ''இரவுப்பட்டியடைத்தல்'' முறை மாடு வளர்ப்பில் மேற்கொள்ளப் பட்டது. குறித்ததொரு இடத்தில் எல்லா மாடுகளும் இரவில் சேர்க்கப்படும் இம் முறையினால் பாதுகாப்பு, வைத்தியம், இனங்காணல், பால் சேகரிப்பு, உரம், நல்லின விருத்தி, வருமானம் போன்ற பல்வேறு நன்மைகளுக்கு அது வழி கோலிற்று. எனினும் இது தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப் படாமையால் தோல்வியடைந்தது. கால்நடை வைத் திருப்போர் எல்லோரும் கூட்டுறவு முறை யில் இயங்கினால் மட்டுமே மேற்கூறப் பட்ட பயன்களைப் பெற்றுக்கொள்ள முடி யும். இம்முறையின் கீழ் 10 மாடுகள் கொண்டு வரப்பட்டால் பால் மூலம் மட் டும் மாதாந்தம் சுமார் ரூபா 2000/- வரு மானத்தை தொடர்ச்சியாக பெறக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளன.

இப்பகுதியில் விவசாயமும் மாடு வளர்ப்பும் பாரம்பரிய பொருளாதார நட வடிக்கைகளாகும். இவ்விரண்டும் பரஸ்

பரம் ஒன்றுடனொன்று இணைந்த வகையில் வளர்ச்சியடைய வேண்டியவைகளுமாகும். எனினும் நிறுவன ரீதியற்ற ஓர் அமைப்பின் கீழ் விவசாயத்திற்கு கால் நடைகள் பெரும் அச்சுறுத்தல்களாயுள்ளன. இரவுப்பட்டியடைத்தல் முறையினால் வேலியில்லாமல் விவசாயம் செய்யவும், பாதுகாப்பாக மாடு வளர்க்கவும் முடியும். 1970 களில் இலவன்குளத்தில் காலைச் சேவை நிலையம் தொடங்கப்பட்டதன் விளைவாக நல்லின மாடுகள் பெருகியுள்ளதுடன் இறைச்சி, பால் என்பனவற்றைப் பெற்றுக் கொள்வதிலும் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. பொன் பரப்பியில் ஐலிப் பகுதியிலமைந்துள்ள (கரைத்தீவிலிருந்து 1 1/2 மைல்)இரணைவில்லு என்னுமிடத்தில் நிறுவனரீதியாக கால்நடை வளர்ப்புத் திட்டம் ஒன்றை ஆரம்பிக்கலாம். இப்பகுதியிலுள்ள காடுகள் மேய்ச்சல் நிலத்திற்காக பயன்படுத்தப்படலாம். இத்துடன் ஆழ்கிணறு மூலம் தேவையான நீரையும் பெற்றுக்கொள்ளலாம்.

இரணை வில்லுப்பகுதியில் உள்ள சுமார் 400 ஏக்கர் நிலப்பரப்பை நவீன முறையிலான கால்நடை வளர்ப்புக்குரிய பகுதியாக அமைக்க இப்பகுதி மக்கள் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். 1975ல் T. V. K. அஸீஸ் முதலியோர் ஆரம்பித்து நடைபெறாமற்போன இரணைவில்லுக் கால்நடைவளர்ப்புத் திட்டத்தை நன்கு ஆராய்ந்து உரிய நடவடிக்கைகளை எடுக்க ஊர்மக்கள் முன் வருவது பயனுள்ள முயற்சியாகும்.

சிறு பயிர்ச்செய்கை, சில்லறை வர்த்தகம், காட்டுத் தொழில் போன்றவற்றிலும் இப்பிரதேச மக்கள் ஈடுபடுகின்றனர். மா, பலா, முருங்கை, மரமுந்திரிகை போன்றவற்றை உற்பத்தி செய்து உள்ளூரிலும் வெளியூர்களிலும் சந்தைப்படுத்துகின்றனர். இப்பிரதேச மக்கள் மரமுந்திரிகைச் செய்கையில் தற்போது அதிக ஆர்வம் காட்டுகின்றனர். இப்பிரதேச புவியியற் சூழல் அதற்குத் துணைநிற்கின்றது. மரமுந்திரிகைச் செய்கையிலிருந்து கூடிய வருமானத்தைப் பெற்றுக் கொள்ளலாம். இதற்கு அதிக ஏற்றுமதி வாய்ப்புகளும் இருப்பதனால் ஓர் ஒழுங்குமுறையான வழிகாட்டல் தேவையாகும்.

சில்லறை வர்த்தகமும் இப்பிரதேச மக்களின் பொருளாதார வாழ்வின் ஒரு பகுதியாகும். மொத்த வியாபார நடவடிக்கைகள் மிகக்குறைவாகும். கரைத்தீவில் தற்போதுள்ள சுமார் 15 கடைகளில் 2 கடைகளில் சில்லறை வியாபாரத்துடன் மொத்த வியாபாரமும் மேற்கொள்ளப்படுகின்றது.

காட்டுத் தொழில் ஆரம்பகாலங்களில் பிரசித்தமானதொன்றாய் இருந்தபோதும் காடழிப்பு, அரச சட்டங்கள் போன்றவை காரணமாக அது தற்போது அருகி வருவதையும் அவதானிக்கலாம். எனினும் வேட்டையாடல், விறகு சேகரித்தல், மரம் வெட்டுதல் போன்றனவற்றுடன் தேன் எடுத்தல் இப்பிரதேசத்தில் இன்றும் பிரசித்தமாயுள்ளது.

பொதுவாகப் பொன்பரப்பியின் பொருளாதார நடவடிக்கையை நோக்கினால் பெரும்பாலும் அது பாரம்பரிய உற்பத்தி முறையைக் கொண்ட முதல் நிலைத் துறையை ஆதாரமாகக் கொண்டிருப்பதுடன் நிறுவன ரீதியற்ற அமைப்பையும் கொண்டுள்ளது. இலங்கையின் கிராமியத் துறை பொதுவாக எதிர்நோக்கும் பிரச்சினைகளையே இப்பிரதேசவாசிகள் எதிர்நோக்குகின்றனர். இப்பிரதேசத்தில் அபிவிருத்தி செய்யக் கூடிய வளங்களும் புதிய தொழில் முயற்சிக்கான வாய்ப்புக்களும் பல இருப்பதாகத் தோன்றுகின்றது. பொருளாதார நடவடிக்கைகளுக்கான பண உதவி ரீதியான ஊக்குவிப்பு, நிபுணத்துவ உதவி, அரசாங்க, அரசசார்பற்ற நிறுவனங்களின் தொடர்பு, கூட்டுறவு முறை என்பவற்றின்மூலம் பொன்பரப்பி தனது வளமான எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப முடியும்.

# இஸ்மாயில்புரம்

புத்தளத்திற்கு வடக்கே ஆறு மைல் தூரத்தில் கடற்கரை ஓரத்தில் அமைந்திருந்த 'அம்பலம்' பொன்பரப்பியின் பழைய முஸ்லிம் கிராமமாகும். வெள்ளப் பெருக்கினாலும், வேறு பல காரணங்களினாலும் கஷ்டமுற்ற 'அம்பலம்' வாசிகள் வட்டக்கண்டலில் குடியேறினர். இக்குடியேற்றத்தை மர்ஹூம் எச். எஸ். இஸ்மாயில் தனது பெருமுயற்சியினால் உருவாக்கினார். அதனால் வட்டக்கண்டல் 'இஸ்மாயில் புரமாகப் பெயர் மாற்றத்தைப் பெற்றது.

## பாடசாலை வரலாறு

வட்டக்கண்டல் பாடசாலை 'அம்பலம்' கிராமத்திலேயே ஆரம்பத்தில் தொடங்கப்பட்டது. 1938-ம் ஆண்டு T. துரைசாமி என்பவரை அதிபராகக் கொண்டு ஒரு ஆசிரியருடன் மட்டும் இது ஆரம்பமாகியது. அப்போதைய மாணவர் தொகை 40 ஆகும். இது அரசாங்கத்தினால் தொடங்கப்பட்ட பாடசாலையாகும். அன்று ஒரு ஓலைக்கட்டிடமாகவே இது இருந்தது. 2½ கிலோ, மீ. தூரத்திலுள்ள வட்டக்கண்டலில் அம்பலவாசிகள் குடியேறிய பின்னர் இது வட்டக்கண்டலில் (இஸ்மாயில்புரம்) இயங்கி வருகிறது. புத்தள நகரிலிருந்து ஆறாவது மைல் கல்லில் இக்கிராமம் அமைந்துள்ளது.

இப்பாடசாலையின் தற்போதைய அதிபர் H. M. கமாலுதீன் ஆவார் 312 மாணவமாணவிகளைக் கொண்ட இப்பாடசாலையில் 12 ஆசிரிய ஆசிரியைகள் பணியாற்றி வருகின்றனர். இங்கு 11ம் வகுப்பு வரை மாணவர்கள் பயில வசதி உள்ளது. 1989-ல் முதன் முதலில் க. பொ. த. O/L பரீட்சைக்குத் தோற்றிய 8 பேரில் இருவர் க. பொ. த. A/L வகுப்புக்குத் தகுதி பெற்றனர். 1991-ல் 18 பேர் சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றினர்.

தற்போது இப்பாடசாலை 3 நிரந்தரக் கட்டிடங்களைக் கொண்டுள்ளது. 4½ ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்ட இப்பாடசாலைக்கென பெரிய விளையாட்டுத் திடலும் இன்று உள்ளது.

## பள்ளிவாசல்

1954-ம் ஆண்டு வட்டக்கண்டல் பள்ளி ஒரு ஓலைக் கட்டிடமாக உருவாகியது. P. M. அப்துல்லா முதல் நிர்வாகக்குழுவின் தலைவராக விளங்கினார். இன்று இப்பள்ளி ஓடு வேயப்பட்ட பெரிய கட்டிடமாகக் காணப்படுகிறது. ஹமீது ஹூஸைன் அப்துல் ஹமீது எனப்பல பொதுச் சேவையாளர்கள் இப்பள்ளியின் வளர்ச்சிக்குத் தொண்டாற்றியுள்ளனர். முக்கியமாக இப்பள்ளியின் இன்றைய நிலைக்கு P. M. அப்துல்லா, K. ஐதுருஸ் லெவ்வை M. நாகூர்பக்கீர், ஆப்தீன், போன்றோரின் முயற்சி முக்கியமாக அமைந்தது.

## பொருளாதாரம்

மீன்பிடித்தலில் மக்கள் ஓரளவு ஈடுபட்டுள்ள போதிலும் இவ்வூர் மக்களின் பொருளாதாரம் கால்நடை வளர்ப்போடு பெருமளவு தொடர்புபட்டுள்ளது. சுமார் 30 சதவீதத்தினர் கால்நடை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். சுமார் 3000 மாடுகளும் 2150 ஆடுகளும் 1000 கோழிகளும் உள்ளதாக ஒரு உத்தேச மதிப்பீடு கூறுகிறது. 5% மானோர் மட்டுமே 75க்கும் கூடிய மாடுகளை வைத்துள்ளனர். ஏனையோர் 10 மாடுகள் அல்லது அதற்குக் குறைவாக வைத்துள்ளனர்.

பட்டிகள் குறைவு, பெறப்படும்பால் பால் சந்தைப்படுத்தும் சபைக்கும் தனியாருக்கும் விற்கப்படுகின்றன. மாடுகள் கட்டாக்காலிகளாக அலைவதனால் உரிய பலன் கிடைப்பதில்லை. கள்வர் தொந்தரவும் இதனால் அதிகம். உயர்ந்த இனத்தை விருத்தி செய்ய முயற்சி எடுப்பது குறைவு. வரட்சி காலத்தில் கால்நடையாளர் பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். அரசினால் இத்துறை நன்கு கவனிக்கப்படுமாயின் இக்கிராமத்திற்கு அது ஒரு பெரும் உதவியாக அமையும்.

# கரைத்தீவின் வளர்ச்சியிலே

எச். எம். எம். அஸ்ஹர்
ஏ. ஏ. பாரிஸ்

எமது ஊர் கரைத்தீவு. கரைத்தீவை தவிர இலவன் குளம், சேராக்குழி, சின்ன நாக வில்லு செட்டிசேனை, 16 ஏக்கர், மகிழம்வில்லு என்று பல பழைய புதிய கிராமங்கள் கரைத்தீவைச் சூழவளர்ந்து வருகின்றன. இவற்றிடையே 'இஸ்மாயில் புரம்' வளர்ச்சி பெற்றுவரும் மற்றொரு கிராமமாகும். புதிய சிங்களக் குடியேற்றங் களும் ஆங்காங்கே தோற்றம் பெற்று வருகின்றன.

வரகவி செய்கு அலாவுதீனுக்கு விழாக் காணும் இவ்வேளையில் கரைத்தீவுக்கும் பொதுவாக பொன்பரப்பிப்பற்று மக் களின் முன்னேற்றத்துக்கும் சேவை யாற்றியவர்களையும் ஊரின் புகழுக்காகப் பாடுபட்டவர்களையும் நினைவு படுத்து வது முக்கியமாகும்.

தம்பி நெய்னாமரைக்கார், எஸ். ரி. எம். காசிம் மரைக்கார், எஸ். ஏ. ஹமீது விதானை, எம். சி. சி. சேக்கான் மரைக் கார், இ. மஹ்து நெய்னா மரைக்கார் செய்கு அலாவுதீன் புலவரின் அருந்தவப் புதல்வர் ஹமீது ஹுசைன் மரைக்கார் உட்பட இன்னும் பலர் ஊரின் வளர்ச்சிக் காக உழைத்துள்ளனர்.

## கிராமச்சபை

கரைத்தீவுக் கிராமச்சபை 1939-ம் ஆண்டு கரடிப் பூவரில் ஆரம்பிக்கப்பட்டு 1942 ஆண்டு வரை வட்டக்கண்டல், இல வன் குளம், கரைத்தீவு ஆகிய கிராமங் களைப் பரிபாலிக்கும் ஒரு நடமாடும் அலுவலகமாக இயங்கியது. 1952ல் வட்டக் கண்டலில் தற்காலிகமாக இயங்க ஆரம் பித்த இது 1952 ஜுலை முதல் கரைத் தீவில் நிரந்தரமாக இயங்கி வருகிறது.

ஆங்கிலேயர் காலத்தில் நாகூர்பிச் சையப்பா கலீபா லெப்பை மரிக்கார், முகமது அலிமரைக்கார் ஆகியோர் இச் சபையின் தலைவர்களாகச் சேவையாற்றி னர். அப்போது தேர்தல் மூலம் இவர்கள் தெரிவுசெய்யப்படவில்லை. சுதந்திரத்தின் பின்னர் பி. எம். அப்துல்லா, என். எம். காதர் சாஹிபு மரைக்கார் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டார்கள் பின்பு இச் சபை வண்ணாத்திவில்லு உப அரசாங்க அதிபரின் கீழ் 1988-ம் ஆண்டிலிருந்து இயங்கிவருகிறது. 1991-ம் ஆண்டு கே. புத்ததாஸ தலைவராகியுள்ளார்.

கல்பிட்டி காதர் சாஹிபு மரைக்கார் தலைவராக இருந்த காலத்திலேயே இப் பகுதி கிராமசபை மூலம் அதிக சேவை களைப் பெற்றுக்கொண்டது. இச்சபைக் கான நிரந்தரக்கட்டிடம் 1952-ல் கட்டப் பட்டது. இதுவரை 33 பொதுக் கிணறுகள் கட்டப்பட்டுள்ளதுடன் பல புதிய பாதை களும் திறக்கப்பட்டுள்ளன. வட்டக்கண் டல், கரடிப்பூவல் போன்ற இடங்களுக் குப் பாதைகள் இடப்பட்டன. சிறுவர் பாடசாலை ஒன்றும் ஒரு நூல்நிலையமும் இங்கு இயங்கிவருகின்றன. ஆழ்கிணறுகள் அமைக்கப்பட்டு குளிப்பதற்கு வசதிகள் செய்யப்பட்டன.

### உத்தியோகம்

ஆசிரியர்கள் (22). மிருகவைத்தியத் துறையில் (01), வங்கியில் (30). இ. போ. ச. வில் (06), தபால்துறையில் (12) இவ்வாறு சுமார் 100 பேர் வரை அரசதுறை உத்தியோகத்தர்களாகத் தொழில் செய்து வருகின்றனர். பட்டம் பெற்ற ஐந்து ஆலிம்களையும் இவ்வூர் பெற்றுள்ளது. தற்போதைய அதிபர் செல்வி பரீனா முதல் பட்டதாரி என்பது குறிப்பிடத்தக்கது.

### கரப்பந்தாட்டம்

கரைத்தீவின் புகழுக்குக் காரணமான வற்றுள் கரப்பந்தாட்டமும் ஒன்றாகும். சுமார் 100 வருடங்களாக ஆடப்பட்டு வரும் இவ்விளையாட்டில் புத்தளப்பகுதியில் சிறந்த ஆட்டக் குழுவினரை கரைத்தீவு ஒரு காலத்தில் பெற்றிருந்தது. வெடியப்பா (முகமது காசிம்), எஸ். எம். சரிபு, எம். கல்லடிப்பிச்சை, ஹமீது ஹுஸைன் மரைக்கார் போன்றோர் மிகச் சிறந்த வீரர்களாக விளங்கினர். கடந்த காலத்தில் கரப்பந்தாட்டம் பெற்ற சிறப்பினை இன்று கரைத்தீவு இழந்துவிட்டது.

### பள்ளிவாசல்கள்

மஸ்ஜிதுல் நூர் ஜும் ஆப்பள்ளி வாசல், முகைதீன் பள்ளிவாசல் மஸ்ஜிதுல் றவ்ளா (செட்டிசேனை), சின்ன நாகவில்லுக் கிராமப்பள்ளிவாசல் ஆகிய பள்ளி வாசல்கள் மக்களின் சன்மார்க்கத் தேவைகளை நிறைவேற்றி வருகின்றன. கரைத்தீவில் அல் மத்ரஸத்துல் ஸுஹ்ரிய்யா அறபுக்கலாசாலை ஒன்றும் காணப்படுகிறது.

## விழா ஏற்பாட்டுக் குழு

**தலைவர் : பீ. வி. எம். நிஸார் ஜே.பி.**

1. போசகர்
   ஜனாப். எம். ஐ. பி ஹாபிஅவர்கள்
2. கே. புத்ததாச வண்ணாத்திவில்லு. பிர. சபை.
3. பிரதேச செயலாளர் -வண்ணாத்திவில்லு
4. ஜனாப்.எம்.எம்.முஸ்தபா.பி.ச.உ.
5. ஜனாப். எஸ். வாவா லெப்பை
6. ஏ. எல். எச். மரிக்கார்
7. கே. எம். ரஸாக் மரைக்கார்
8. ஏ. எம். சேகு இப்ராகீம்
9. எம். அஸீஸ்
10. கே. பி. வாகித் .கி.சே.
11. என்.பி. முனாப். கி. சே
12. ஏ. ஏ. கபூர்
13. எம். எம். சாகுல் ஹமீது. பி.ச.உ
14. எம். உமர் பாச்சா. பி. ச. உ
15. சே. எம். எஸ். மொகிதீன்
16. ஏ. எம். நஜீம்
17. கே. எம். ஏ. அஸீஸ்
18. கே. எம். ஜப்பார்
19. எம். எம். இப்ராகீம்
20. கே. பி. சகீத் கி. சே
21. எம். வ ஹாறூன். கி. சேத
22. எம். சீ. எம்.மசூத்
23. எச். எச். சவாகீர்
24. எஸ். ஐ. எம். ஏ. ஜப்பார்
25. ஏ. ஜே.எம். ஜலீல்.பி.க. பணி
26. ஏ. என். எம். சாஜஹான்
27. பீ. ஐ. ஜிப்ரி–மாவட்ட பொறியியலாளர்
28. எம். ஐ. எம். அப்துல் லத்தீப்